# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2019

## 49 - கிறிஸ்தவ நாகரிகம்

## பழைய பாடத்திட்டம்

## புள்ளி வழங்கும் திட்டம்

### கிறிஸ்தவ நாகரிகம் I

பலவினுள் தெரிவு 50 வினாக்களைக் கொண்டுள்ளது. 50 வினாக்களும் முழுப்பாடத் திட்டத்தையும் உள்ளடக்கியுள்ளது. மாணவர்கள் முழுப்பாடத் திட்டத்தையும் பாடப்பரப்பையும் அறிந்துள்ளனர் என்பதை அறிவதற்கு இது உதவியாக அமையும்.

**புள்ளி வழங்கப்படும் விதம்**

| | |
|---|---|
| பலவினுள் தெரிவு வினாக்கள் | - 50 |
| வழங்கப்படும் புள்ளிகள் | - 02 |
| மொத்தம் | - 02 x 50 = 100 |

# கிறிஸ்தவ நாகரிகம் II

## பகுதி - 1

| | | |
|---|---|---|
| வினாக்களின் எண்ணிக்கை | - | 03 |
| விடையளிக்க வேண்டிய வினாக்கள் | - | 02 |
| ஒரு வினாவுக்கான புள்ளிகள் | - | 20 |
| ஒரு வினாவிலுள்ள ஒரு பிரிவுக்கான புள்ளிகள் | - | 04 |
| ஒரு வினாவிலுள்ள மொத்தப் பிரிவுகள் | - | 05 |
| எனவே ஒரு வினாவுக்கான மொத்தப் புள்ளிகள் | - | 1 x 4 x 5 = 20 |
| எனவே பகுதி 1 இரண்டு வினாக்களுக்குமான புள்ளிகள் | - | 2 x 20 = 40 |

## பகுதி - 11

| | | |
|---|---|---|
| வினாக்களின் எண்ணிக்கை | - | 05 |
| விடையளிக்க வேண்டிய வினாக்கள் | - | 03 |
| ஒரு வினாவுக்கான புள்ளிகள் | - | 20 |
| ஒரு வினாவிலுள்ள ஒரு பிரிவுக்கான புள்ளிகள் | - | 05 |
| ஒரு வினாவிலுள்ள மொத்தப் பிரிவுகள் | - | 04 |
| எனவே ஒரு வினாவுக்கான மொத்தப் புள்ளிகள் | - | 1 x 5 x 4 = 20 |
| எனவே பகுதி 11 மூன்று வினாக்களுக்குமான புள்ளிகள் | - | 3 x 20 = 60 |

## இறுதிப் புள்ளி வழங்கல் முறை

| | | |
|---|---|---|
| கிறிஸ்தவ நாகரிகம் 1 | - | 100 புள்ளிகள் |
| கிறிஸ்தவ நாகரிகம் 11 | - | 100 புள்ளிகள் |
| இறுதிப் புள்ளி | - | 200 ÷ 2 = 100 |

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ..............................................................................
..............................................................................
.............................................................................. ✓ 4/5

(ii) ..............................................................................
..............................................................................
.............................................................................. ✓ 3/5

(iii) ..............................................................................
..............................................................................
.............................................................................. ✓ 3/5

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

**புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

ooo

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය/பழைய பாடத்திட்டம்/Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

05. 08. 2019 / 0830 - 1030

ක්‍රිස්තියානි ශිෂ්ටාචාරය I
கிறிஸ்தவ நாகரிகம் I
Christian Civilization I

49 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள்:**

- **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைகத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் புள்ளடி (X) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** நைல் நதிக்கரை பள்ளத்தாக்கு நாகரிகம் பற்றிய சரியான கூற்று,
(1) எழுதுவதற்கு பப்பிரஸ் பயன்படுத்தப்பட்டது.
(2) கனவுகளை விளக்கும் பாரம்பரியத்தைக் கொண்டிருந்தது.
(3) மருந்துகளின் உற்பத்திக்காக மூலிகைகள் பயன்படுத்தப்பட்டன.
(4) சிறப்பான சட்டங்கள் உருவாக்கப்பட்டன.
(5) சக்கரப் பாவனை கண்டுபிடிக்கப்பட்டது.

**2.** இயேசு கிறிஸ்துவின் வாழ்வுடன் தொடர்புடைய மூன்று இடங்களை உள்ளடக்கிய தொகுதி யாது?
(1) யூதேயா, சுமேரியா, கலிலேயா
(2) சுமேரியா, எருசலேம், கானா
(3) சமாரியா, மெசப்பத்தேமியா, யூதேயா
(4) கலிலேயா, நாசரேத், எருசலேம்
(5) நாசரேத், பபிலோனியா, கானா

**3.** எகிப்தில் இஸ்ரேயல் மக்கள் அடிமைகளாக இருந்தபோது எகிப்தை ஆண்ட மன்னன் யார்?
(1) நபுகோதனசார்
(2) இரண்டாம் இராம்சேசு
(3) சரகோன்
(4) சைரஸ்
(5) எப்பிபானுஸ்

**4.** 'வுல்கத்தா' இலத்தீன் மொழிபெயர்ப்பு பைபிளை வழிபாட்டிற்கு ஏற்றதாக அங்கீகரித்த பொதுச்சங்கம்
(1) நிசேயா
(2) கல்சடோன்
(3) எபேசு
(4) திரிதெந்து
(5) முதலாம் வத்திக்கான்

**5.** பாலஸ்தீனாவின் தென்கரையோர பகுதியில் வாழ்ந்த மக்கள்
(1) பெனிசியர்
(2) பிலிஸ்தீயர்
(3) மக்கபேயர்
(4) ஏதோமியர்
(5) மோவாப்பியர்

**6.** பாலஸ்தீனாவின் மேற்கு மலைப்பகுதியில் **அமையாத** இடம்
(1) மேல் கலிலேயா
(2) ஜெருசலேம்
(3) சமாரியா
(4) ஹெப்ரோன்
(5) கார்மேல் மலை

**7.** இஸ்ரயேல் மக்கள் எந்த இனக்குழுவினைச் சார்ந்தவர்கள்?
(1) இந்திய - ஐரோப்பியர்கள்
(2) செமித்தியர்கள்
(3) கிக்கோஷ்
(4) பெனிசியர்கள்
(5) ஆரியர்கள்

**8.** மகா அலெக்ஸ்சாண்டர் மன்னனின் ஆட்சியின் பின்னர் பாலஸ்தீனாவை ஆட்சி செய்த மன்னன் யார்?
(1) சைரூஸ்
(2) பொம்பே
(3) அந்தியோக்கஸ் எபிபானுஸ்
(4) செலுசீட்ஸ்
(5) தாலமி

**9.** இஸ்ரயேல் மக்கள் பபிலோனிய அடிமைத்தனத்தில் இருந்தபோது பபிலோனியாவைக் கைப்பற்றி அவர்களை விடுவித்த அரசன் யார்?
(1) தாரியுஸ் (2) சார்கோன் (3) தாலமி
(4) மகா அலெக்சாண்டர் (5) சைரூஸ்

**10.** அடிமைத்தனத்தினைத் தொடர்ந்து வாழ்ந்த சமாரியர்களின் ஆலயம் அமைந்திருந்த இடம் யாது?
(1) கார்மேல் (2) தாபோர் (3) கலிலேயாவின் மேற்பகுதி
(4) கெரிசீம் (5) ஹெப்ரோன்

**11.** உரோமைய பேரரசினைக் கட்டியெழுப்புவதற்கு அடித்தளமிட்டவர்
(1) பொம்பே ஆவார். (2) ரோமுஸ் ஆவார்.
(3) மகா அலெக்சாண்டர் ஆவார். (4) பெரிய ஏரோது ஆவார்.
(5) யூலியஸ் சீசர் ஆவார்.

**12.** சலனம் (motion) பற்றிய மூன்று நியமங்களை முன்வைத்த விஞ்ஞானி யார்?
(1) ரெயார்ட் டே சார்டேன்
(2) அலெக்சாண்டர் பிளெமின்
(3) சேர் ஐசக் நியுட்டன்
(4) அல்பர்ட் ஐன்ஸ்டீன்
(5) அலெக்சாண்டர் கிரஹம் பெல்

**13.** பெரிய ஏரோது மன்னர் ஆட்சியின் பின்னர் யூதாவை ஆண்ட அர்க்கெலா மன்னன் பதவிநீக்கம் செய்யப்பட்டமைக்கான காரணம்,
(1) அர்க்கெலா மன்னன் சுகயீனமடைந்தமையாகும்.
(2) அவர் கிரேக்கர்களுக்கு ஆதரவு வழங்கியமையாகும்.
(3) அவரது கொடுங்கோல் ஆட்சி பற்றி யூதர்களால் உரோமைக்குப் புகார் செய்யப்பட்டமையாகும்.
(4) எருசலேமில் அந்நிய தெய்வங்களை வழிபட்டமையோடு, மக்களையும் வழிபடத் தூண்டியமையாகும்.
(5) திருமுழுக்கு யோவானுக்கு எதிராகச் செயற்பட்டமையாகும்.

**14.** லியோனாடோ டாவின்சி இறுதி இராவுணவு ஓவியத்தை வரைந்த இடம்,
(1) சிஸ்ரயின் சிற்றாலயச் சுவர்
(2) புனித பேதுரு பேராலயச் சுவர்
(3) வத்திக்கான் நூல் நிலையச் சுவர்
(4) மிலான் நகர் உணவுச்சாலைச் சுவர்
(5) சிஸ்ரயின் சிற்றாலய உட்கூரை

**15.** 2019 ஆம் ஆண்டு தீயினால் அழிவடைந்த, கோதிக் கட்டடக் கலைப்பாணியில் அமைந்த பேராலயம் எது?
(1) உரோம், புனித பேதுருவானவர் பேராலயம்
(2) உரோம், லாத்தரன் பேராலயம்
(3) பரீஸ், நோத்திரடாம் பேராலயம்
(4) லண்டன், வெஸ்மினிஸ்ரர் பேராலயம்
(5) கொழும்பு, புனித லூசியா பேராலயம்

**16.** போர்த்துக்கேய மிசனரிமாரை இலங்கைக்கு அழைத்த மன்னன் யார்?
(1) முதலாம் விஜயபாகு (2) ஏழாம் புவனேகபாகு (3) நான்காம் விஜயபாகு
(4) மாயாதுன்னை (5) தர்ம பராக்கிரமபாகு

**17.** இலங்கையில் முதன்முதலில் கற்றல்-கற்பித்தற் செயன்முறையில் நாடகத்தைப் பயன்படுத்திய துறவற சபையினர்
(1) இயேசு சபையினர் (2) அகுஸ்தீனார் சபையினர்
(3) பிரான்சிஸ்கன் சபையினர் (4) ஒறற்ரோறியன் சபையினர்
(5) டொமினிக்கன் சபையினர்

**18.** புனித பவுல் பற்றிய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A - அரமெயிக் மொழி பேசிய யூதராவார்.

B - யூத - உரோமைய குடியேற்றவாசியாவார்.

C - யூத சட்டங்களையும் பாரம்பரியங்களையும் நன்கறிந்தவராவார்.

D - புறவினத்தாரின் திருத்தூதராவார்.

E - யூதா குலத்தைச் சார்ந்தவராவார்.

இவற்றுள் சரியான கூற்றுக்கள் யாவை?

(1) A, B, C (2) A, C, D (3) B, C, D (4) B, C, E (5) C, D, E

**19.** சிலுவைப் போர்கள் பற்றிய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A - புனித நாட்டினை விடுவிக்க நிகழ்த்தப்பட்டது.

B - துருக்கியரிடமிருந்து திருச்சிலுவையினை மீட்க நிகழ்த்தப்பட்டது.

C - எட்டு சிலுவைப் போர்கள் நிகழ்ந்தன.

D - ஐரோப்பியர்கள் சிலுவைப்போரில் ஈடுபட மறுத்தார்கள்.

E - சிலுவைப் போர்கள் 11 தொடக்கம் 13 வரையான நூற்றாண்டு காலப்பகுதியில் நடைபெற்றன.

இவற்றுள் சரியான கூற்றுக்கள் யாவை?

(1) A, B, C (2) A, C, E (3) B, C, D (4) B, D, E (5) C, D, E

**20.** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக

A - உரோமை நகர் தைபர் நதிக்கரையில் அமைந்துள்ளது.

B - உரோமையில் வாழ்ந்த பல்வேறு குழுக்கள் தங்களுக்குள் அடிக்கடி போரிட்டுக் கொண்டன.

C - உரோமையர்கள் விவசாயத்திலும் போரிலும் தங்கள் ஆற்றலை வெளிப்படுத்தினர்.

D - உரோமைப் பேரரசு முழுவதும் காணப்பட்ட வீதிக் கட்டமைப்பு பல நாகரிகங்கள் ஒன்றுபட உதவியது.

E - உரோமையரின் மதம் தவிர்ந்த ஏனைய எந்தவொரு மதமும் உரோமைப் பேரரசினுள் அனுமதிக்கப்படவில்லை.

இவற்றுள் உரோமையர்கள், உரோமைப் பேரரசு பற்றிய சரியான கூற்றுக்கள் யாவை?

(1) A, B, C (2) A, B, D (3) A, C, D (4) B, C, D (5) C, D, E

**21.** புனித இஞ்ஞாசியார் பற்றிய சரியான கூற்று

(1) புனித பவுலைப் பின்பற்றியவராவார்.
(2) அந்தியோக்கு கல்விக் கூடத்தின் முதல்வராவார்.
(3) அப்போலோஜியா எனும் நூலின் ஆசிரியராவார்.
(4) ஏழு கடிதங்களை எழுதிய அந்தியோக்கு ஆயராவார்.
(5) ஆரிய பேதகத்திற்கு எதிராகப் போராடியவராவார்.

**22.** பின்வருவோருள் இலத்தீன் திருச்சபையின் தந்தையர்கள் யாவர்?

(1) புனிதர்களான யஸ்ரின், நிசேயா கிறகோரியார், அகுஸ்தீனார் ஆகியோராவர்.
(2) புனிதர்களான பசில், அலெக்சாந்திரியா சிறில், அம்புரோஸ் ஆகியோராவர்.
(3) புனிதர்களான நிஸ்ஸான்ஸ் கிறகோரியார், அலெக்சாந்திரியா சிறில், யோவான் கிறிசோஸ்த்தம் ஆகியோராவர்.
(4) புனிதர்களான அத்தனாசியுஸ், அம்புரோஸ், பசில் ஆகியோராவர்.
(5) புனிதர்களான அம்புரோஸ், யோவான் கிறிசோஸ்த்தம், அகுஸ்தீனார் ஆகியோராவர்.

**23.** கி.பி. 5ஆம் நூற்றாண்டில் உரோமை மீது படையெடுத்த இனக்குழுவினர் யாவர்?

(1) விஸ்கோத்தியர் (2) வண்டல்ஸ்
(3) அங்கிலோ சக்சன் (4) லொம்பாடியர்
(5) பிராங்ஸ்

[பக். 4 ஐப் பார்க்க

**24.** புனித ஆசீர்வாதப்பர் சபை பற்றிய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - சபையின் விருதுவாக்கு செபமும் வேலையுமாகும்.
B - உலகின் பல பாகங்களுக்கும் சென்று நற்செய்தியைப் பறைசாற்றினார்கள்.
C - ஐரோப்பாவின் நகரமயமாக்கலுக்குப் பெரிதும் பங்களிப்புச் செய்தார்கள்.
D - பழைய ஆவணங்களை மொழிபெயர்ப்புச் செய்வதை நேர வீண் விரயம் எனக் கருதினார்கள்.
E - ஐரோப்பாவின் கல்வி மேம்பாட்டிற்குப் பெரும் பங்களிப்புச் செய்தார்கள்.
இவற்றுள் சரியான கூற்றுக்கள் யாவை?
(1) A, B, C (2) A, C, E (3) B, C, D (4) B, C, E (5) C, D, E

**25.** ஆச்சிரம வாழ்வு பற்றிய **தவறான** கூற்று
(1) ஆரம்பக் கட்டத்தில் சொந்த வீடுகளில் தங்கி தங்கள் வாழ்வைச் செபத்தில் கழித்தனர்.
(2) ஏழ்மை, பிரமச்சாரியம் (மணத்துறவு), பரித்தியாகம் என்பன மடத்துறவிகளின் வாழ்க்கை முறையாக இருந்தன.
(3) புனிதத்துவத்தை அடைவதற்கு உலகிலிருந்தும் மக்களிடமிருந்தும் விலகியிருப்பது முக்கியம் எனக் கருதினர்.
(4) கீழைத்தேய ஆச்சிரம வாழ்விற்குப் புனித பெரிய பசில் ஒழுங்கு நூலை எழுதினார்.
(5) கீழைத்தேய ஆச்சிரம வாழ்க்கை முறையை மேலைத்தேசத்திற்கு அறிமுகப்படுத்த புனித அத்தனாசியுஸ் பெருமுயற்சி மேற்கொண்டார்.

**26.** சிஷ்ரேசியன் சபை ஆரம்பிக்கப்பட்டமைக்கான காரணம் யாது?
(1) புதிய துறவற சபையொன்றை ஆரம்பிப்பதற்கான தேவை ஏற்பட்டமையாகும்.
(2) ஏனைய நாடுகளுக்கு மிசனறிமாரை அனுப்புதலாகும்.
(3) ஆன்மீக முன்னேற்றத்திற்குத் தேவையானதொரு படியாக்கிக் கொள்ளலாகும்.
(4) ஆசீர்வாதப்பர் சபையின் ஆரம்ப ஆச்சிரம வாழ்வை மீளவும் வாழ்தலாகும்.
(5) அக்காலத்தில் இருந்த துறவற சபைகளில் மக்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றமாகும்.

**27.** ஐரோப்பிய நாடுகளில் 5 ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவத்தை முற்றாக ஏற்றுக்கொண்ட நாடு எது?
(1) இத்தாலி (2) ஸ்பானியா (3) டென்மார்க் (4) ஜெர்மனி (5) பிரான்ஸ்

**28.** ஸ்கொட்லாந்து நாட்டின் பாதுகாவலர் யார்?
(1) புனித பெரிய கிரகோரியார் (2) புனித பற்றிக் (3) புனித அகுஸ்தீனார்
(4) புனித பொனிபஸ் (5) புனித கொலம்பான்

**29.** இரவலர் சபை பற்றிய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - திருச்சபையில் ஆன்மீகப் புதுப்பித்தலை ஏற்படுத்துதல்
B - இரவலர் வாழ்க்கை முறைமை போதிப்பவர்களுக்கு ஏற்றதென உணரப்பட்டமை
C - உலக வசதிகளையும் செல்வங்களையும் துறத்தல்
D - அன்றாட தேவைகளுக்காக இரத்தல்
E - புதிய துறவற வாழ்வு முறையைப் பரீட்சித்தல்
இவற்றுள் சரியான கூற்றுக்கள் யாவை?
(1) A, B, C (2) A, B, D (3) A, C, D (4) B, C, D (5) C, D, E

**30.** சீர்திருத்தத் திருச்சபையைச் **சாராத** திருச்சபை எது?
(1) லூத்தரன் சபை (2) பப்ரிஸ்ற் சபை
(3) மெதடிஸ்த சபை (4) அங்கிலிக்கன் சபை
(5) பிரஸ்பிற்ரேரியன் சபை

**31.** பின்வருவனவற்றுள் புரட்டஸ்தாந்து மறுமலர்ச்சிற்கு வித்திட்ட காரணி **அல்லாதது** எது?
(1) திருச்சபைத் தலைவர்களின் உலகியல் போக்கிலான வாழ்க்கை முறை
(2) திருச்சபைக்கும் உரோமைப் பேரரசுக்கும் இடையேயான அதிகாரப் போராட்டம்
(3) திருச்சபைத் தலைவர்கள் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டமையும் உலகியல் தலைவர்கள் திருச்சபையின் செயற்பாடுகளில் முறையற்ற விதத்தில் தலையிட்டமையும்
(4) திருச்சபை தனிநபர்களால் ஆட்சி செய்யப்படுவதைவிட ஆட்சி பன்முகப்படுத்தப்படல் மிகப் பொருத்தமானதென்ற கருத்து ஏற்பட்டமை
(5) திருச்சபையின் தலைவர்களின் நடத்தை பற்றிய பொதுநிலையினரிடையே காணப்பட்ட அதிருப்தி

**32.** பின்வருவனவற்றுள் மாட்டின் லூத்தரின் பிரதான படிப்பினை யாது?
(1) நம்பிக்கை (விசுவாசம்) மாத்திரம் போதுமானது.
(2) நற்கருணையில் கிறிஸ்துவின் உண்மைப் பிரசன்னம்
(3) உத்தரிப்பு ஸ்தலம்
(4) வான தூதர்
(5) பரிபூரண பலன்கள்

**33.** மத்தியு ரிச்சி அடிகளார் பற்றிய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - பிரான்ஸ் நாட்டவர்.
B - இயேசு சபைக் குருவானவர்.
C - தேசியப் பண்பாட்டினை மதித்தவர்.
D - கொரிய நாட்டில் மறைப்பணியாற்றியவர்.
E - வான சாஸ்திரத்தில் பிரசித்தி பெற்றவர்.
இவற்றுள் சரியான கூற்றுக்கள் யாவை?
(1) A, B, C (2) A, C, D (3) B, C, E (4) B, D, E (5) C, D, E

**34.** பின்வருவனவற்றுள் கொன்ஸ்ரைன் பேரரசன் வரலாற்றில் இடம்பெறுவது,
(1) கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியமையாலாகும்.
(2) திருவிவிலியத்தை மொழிபெயர்க்க உதவியமையாலாகும்.
(3) கிறிஸ்தவர்களுக்கு மதச்சுதந்திரம் அளித்தமையாலாகும்.
(4) கிறிஸ்துவைப் பின்பற்றியவர்களை கிறிஸ்தவரென்று அழைத்தமையாலாகும்.
(5) கி.பி. 66 தொடக்கம் கி.பி. 70 வரையான காலப்பகுதியில் யூதர்களுக்கு எதிராகப் போர் தொடுத்தமையாலாகும்.

**35.** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - யாழ்ப்பாணத்தில் நற்செய்தியினை அறிவித்தார்.
B - திருகோணமலையில் இராணுவத்தினர் மத்தியில் பணியாற்றினார்.
C - நற்செய்தி அறிவிக்க மறையாசிரியர்களைப் பயிற்றுவித்தார்.
D - மறைபரப்புப் பணியாளராக கொழும்பில் காலமானார்.
E - ஆலயங்களுக்கு அருகில் பாடசாலைகளை அமைத்தார்.
இவற்றுள் பிலிப் பல்தேயுஸ் குறித்த சரியான கூற்றுக்கள் யாவை?
(1) A, B, C (2) A, B, E (3) A, C, E (4) B, C, D (5) C, D, E

**36.** ஐரோப்பாவில் முதன்முதலில் பங்குப் பாடசாலைகளை அமைத்த துறவற சபையினர்
(1) பிரான்சிஸ்கன் சபையினர் (2) இயேசு சபையினர் (3) பெனடிக்ற் சபையினர்
(4) டொமினிக்கன் சபையினர் (5) அகுஸ்தீனார் சபையினர்

**37.** பின்வருவனவற்றுள் 'கிறிஸ்து வழி வாழ்வு' என்னும் நூல் பற்றிய சரியான கூற்று யாது?
(1) பின் மத்திய காலத்தில் எழுதப்பட்டது.
(2) புனித சிலுவை யோவானால் எழுதப்பட்டது.
(3) ஐரோப்பிய மொழிகளில் மட்டும் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டது.
(4) ஒப்புரவு அருட்சாதனம் பற்றி விவரிக்கப்பட்டது.
(5) ஆன்மீக வாழ்வு தாழ்ந்த மட்டத்தில் காணப்பட்ட காலத்தில் எழுதப்பட்டது.

**38.** பின்வருவனவற்றுள் புனித சிலுவை அருளப்பர் எழுதிய நூல் எது?
(1) உள்ளக அரண்மனை (2) கிறிஸ்து வழி வாழ்வு
(3) அடிப்படைகள் (foundations) (4) ஆன்மாவின் இருள் அடர் இரவு
(5) தன்னிலை ஏற்பு

**39.** சிங்கள, தமிழ் கிறிஸ்தவ இலக்கியத்தின் தந்தையெனப் போற்றப்படுபவர் யார்?
(1) ஜோசப் வாஸ் அடிகளார் (2) ஜோசப் மெனாசேஸ் அடிகளார்
(3) வண. பிலிப் பல்தேயுஸ் (4) யாக்கோமே கொன்சால்ஸ் அடிகளார்
(5) மிகேல் டி மெல்லோ அடிகளார்

[பக். 6 ஐப் பார்க்க

**40.** இரண்டாம் வத்திக்கான் சங்கம் பற்றிய சரியான இணைப்புச் சோடியினைத் தெரிவுசெய்க.
(1) திருத்தந்தை ஆறாம் பவுல் - சங்கத்தினை ஆரம்பித்து வைத்தவர்
(2) யாவிஸ் கொங்கார் - பொதுநிலையினருக்கு முன்னுரிமை அளித்தவர்
(3) சங்கம் கூட்டப்பட்டதன் நோக்கம் - பேதகங்களைக் கண்டித்தல்
(4) வெளியீடு செய்யப்பட்டவை - பதினெட்டு ஆவணங்கள்
(5) இன்றைய உலகில் திருச்சபை - கல்வி பற்றிய விடயங்களை உள்ளடக்கியது

**41.** இந்தியாவிலுள்ள திருச்சபைகளில் உரோமன் கத்தோலிக்க திருச்சபையினைச் சார்ந்த திருச்சபைகள் யாவை?
(1) சீரோ மலபார் திருச்சபை, இலத்தீன் திருச்சபை, தோமையார் கிறிஸ்தவர்கள்
(2) சிரிய கிறிஸ்தவர்கள், சீரோ மலங்கரா திருச்சபை, யாக்கோபித்த சிரிய திருச்சபை
(3) சீரோ மலங்கரா திருச்சபை, சீரோ மலபார் திருச்சபை, வைதீக சிரிய திருச்சபை
(4) மலங்கரா சிரிய வைதீக திருச்சபை, மார்தோமா திருச்சபை, இலத்தீன் திருச்சபை
(5) சீரோ மலபார் திருச்சபை, சீரோ மலங்கரா திருச்சபை, இலத்தீன் திருச்சபை

**42.** பிலிப்பைன்ஸ் நாட்டில் நற்செய்தியினை அறிவித்தவர்கள்
(1) பிரான்சியர்கள் (2) இத்தாலியர்கள் (3) வட அமெரிக்கர்கள்
(4) போர்த்துக்கேயர்கள் (5) ஸ்பானியர்கள்

**43.** போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையில் மறைபரப்புப் பணிகளில் ஈடுபட்ட துறவற சபைகள் நான்கும் யாவை?
(1) பிரான்சிஸ்கன், ஆசிர்வாதப்பர், சொமஸ்கன், இயேசு சபையினர்
(2) பிரான்சிஸ்கன், இயேசு, டொமினிக்கன், அகுஸ்தீன் சபையினர்
(3) அமலமரித்தியாகிகள், டொமினிக்கன், கிளரேசியன், அகுஸ்தீன் சபையினர்
(4) அகுஸ்தீன், பிரான்சிஸ்கன், ஆசிர்வாதப்பர், சலேசியன் சபையினர்
(5) சலேசியன், இயேசு, பிரான்சிஸ்கன், டொமினிக்கன் சபையினர்

**44.** ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் காணப்பட்ட மூன்று வகையான பாடசாலைகளும் யாவை?
(1) மிஷன் பாடசாலைகள், செமினறிப் பாடசாலைகள், அரசாங்கப் பாடசாலைகள்
(2) அரசாங்கப் பாடசாலைகள், பிரிவெனாப் பாடசாலைகள், அனாதைப் பாடசாலைகள்
(3) செமினறிப் பாடசாலைகள், கோவில்பற்றுப் பாடசாலைகள், மிஷன் பாடசாலைகள்
(4) அரசாங்கப் பாடசாலைகள், மிஷன் பாடசாலைகள், பிரிவெனாப் பாடசாலைகள்
(5) அரசாங்கப் பாடசாலைகள், செமினரிப் பாடசாலைகள், பிரிவெனாப் பாடசாலைகள்

**45.** பின்வருவனவற்றுள் புனித தோமஸ் அக்குவினாஸ் பற்றிய சரியான கூற்று யாது?
(1) 13 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இறையியலாளராவார்.
(2) திருச்சபை வரலாற்றியலில் பெரும் நிபுணராவார்.
(3) பிரான்சிஸ் அசிசியாரின் வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்தவராவார்.
(4) பொலஞ்ஞா பல்கலைக்கழக மாணவராவார்.
(5) ‘இறைவனின் நகர்’ என்னும் நூலை எழுதியவராவார்.

**46.** சமூக நீதிக்காக குரல் கொடுத்த அங்கிலிக்கன் திருச்சபைத் தலைவர் யார்?
(1) ஆயர் லீயோ நாணயக்கார
(2) ஆயர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க
(3) அருட்திரு மைக்கல் றொட்ரிக்கோ
(4) அருட்திரு மேரி பஸ்தியான்
(5) அருட்திரு எச். எஸ். தாவீது

**47.** அனுராதபுர ஆட்சிக் காலத்தில் பாரசீகக் கிறிஸ்தவர்கள் இலங்கையில் வாழ்ந்தார்கள் எனும் கருத்தினையுடைய வெளிநாட்டு எழுத்தாளர்கள்
(1) இவ்வஹாப், அபுசாயிப் (2) பென்சமின் ரபாய், திபெத்
(3) இவ்வஹாப், திபெத் (4) கொஸ்மஸ் இன்டோப்லேடாப், திபெத்
(5) கொஸ்மஸ் இன்டோப்லேடாப், அபுசாயிப்

**48.** திருச்சபைச் சபைகள் பற்றிய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A - 1947 ஆம் ஆண்டில் பம்பாயில் ஆரம்பிக்கப்பட்டது.
B - 1957 ஆம் ஆண்டில் இந்தோனேசியாவில் ஆரம்பிக்கப்பட்டது.
C - கிட்டத்தட்ட 100 பிளவுற்ற திருச்சபைகளின் ஒருங்கிணைக்கப்பட்ட அமைப்பாகும்.
D - இலங்கை இவ்வமைப்பின் உறுப்புரிமை நாடாகும்.
E - ஆசியாவில் கிறிஸ்தவத்தைப் பரப்புதல் இவ்வமைப்பின் நோக்கமாகும்.

இவற்றுள் ஆசிய கிறிஸ்தவ சபைகளின் சம்மேளனம் (ACC) பற்றிய கூற்றுக்கள் யாவை?

(1) A, B, C (2) A, B, D (3) B, C, D (4) B, D, E (5) C, D, E

**49.** 'மனித உழைப்பு' எனும் சுற்றுமடலை எழுதிய திருத்தந்தை யார்?

(1) XIII ஆம் லீயோ (2) XXIII ஆம் யோவான் (3) VI ஆம் பவுல்
(4) II ஆம் யோன் பவுல் (5) XVI ஆம் பெனடிக்ற்

**50.** கிறிஸ்தவ ஒன்றிப்பு முக்கியமானதாய் அமைவதற்கான காரணம்,

(1) கிறிஸ்தவம் உலகத்தின் பிரதான மதமாவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கின்றமையாகும்.
(2) உலகில் திருச்சபையின் அதிகாரத்தை அதிகரிப்பதற்குக் காரணமாகின்றமையாகும்.
(3) கிடைக்கத்தக்கதான வளங்களின் வீண்விரயத்தைத் தடுக்க முடியுமாயிருக்கின்றமையாகும்.
(4) நற்செய்தி அறிவிப்புக்கு கிறிஸ்தவர்களுக்கிடையிலான ஒற்றுமையின்மை பெரும் தடையாகக் காணப்படுகின்றமையாகும்.
(5) திருச்சபையின் உரிமைகளைப் பாதுகாக்க உதவுகின்றமையாகும்.

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2019

පැරණි නිර්දේශය/ பழைய பாடத்திட்டம்

විෂය අංකය / பாட இலக்கம்: **49** විෂයය / பாடம்: **கிறிஸ்தவ நாகரிகம்**

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 1 | 11. | 2 | 21. | 4 | 31. | 4 | 41. | 5 |
| 02. | 4 | 12. | 3 | 22. | 5 | 32. | 1 | 42. | 5 |
| 03. | 2 | 13. | 3 | 23. | 1 | 33. | 3 | 43. | 2 |
| 04. | 4 | 14. | 4 | 24. | 2 | 34. | 3 | 44. | 4 |
| 05. | 4 | 15. | 3 | 25. | 1,3 | 35. | 3 | 45. | 1 |
| 06. | 5 | 16. | 2 | 26. | 4 | 36. | 3 | 46. | 2 |
| 07. | 2 | 17. | 1 | 27. | 5 | 37. | 5 | 47. | 4 |
| 08. | 5 | 18. | 3 | 28. | 5 | 38. | 4 | 48. | 3 |
| 09. | 5 | 19. | 2 | 29. | 3 | 39. | 4 | 49. | ALL |
| 10. | 4 | 20. | 3 | 30. | 4 | 40. | 2 | 50. | 4 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 02 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 2 × 50 = 100

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය/பழைய பாடத்திட்டம்/Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

ක්‍රිස්තියානි ශිෂ්ටාචාරය II
கிறிஸ்தவ நாகரிகம் II
Christian Civilization II

49 T II

06.08.2019 / 0830-1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ **பகுதி I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் **பகுதி II** இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) யூத கலாசாரத்தின் மீது எகிப்திய, மொசபொத்தேமிய நாகரிகங்கள் செலுத்திய தாக்கங்கள் **நான்கினைத்** தருக.
(ii) கிரேக்க நாகரிகத்தின் பண்புகள் **நான்கினைக்** குறிப்பிடுக.
(iii) உரோமைய நாகரிகத்தின் குணாதிசயங்கள் **நான்கினை** எழுதுக.
(iv) திருச்சபை கிரேக்க மொழியைப் பயன்படுத்தியதால் கிடைத்த நன்மைகள் **நான்கினைக்** குறிப்பிடுக.
(v) திருச்சபை இலத்தீன் மொழியைப் பயன்படுத்தியதால் கிடைத்த நன்மைகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(4 × 5 = 20 புள்ளிகள்)

**2.** (i) மிலான் சாசனத்தின் உறுப்புரைகள் **நான்கினைக்** குறிப்பிடுக.
(ii) மனிக்கேய பேதகத்தின் படிப்பினைகள் **நான்கு** எழுதுக.
(iii) மத்திய காலத்தில் திருச்சபையின் ஆன்மீகச் சீரழிவுக்கு ஏதுவான காரணிகள் **நான்கினைத்** தருக.
(iv) புனித சிலுவை அருளப்பரால் எழுதப்பட்ட நூல்கள் **நான்கினைப்** பெயரிடுக.
(v) ஐரோப்பாவில் கிறிஸ்தவம் பரவிய வழிமுறைகள் பற்றிய **நான்கு** விடயங்களை எழுதுக.

(4 × 5 = 20 புள்ளிகள்)

**3.** (i) பிரான்சிஸ்கன் சபையினரின் கல்விப் பணிகளில் காணப்பட்ட நேர்ப்பாங்கான பண்புகள் **நான்கினைக்** குறிப்பிடுக.
(ii) பிரான்சிஸ்கன் சபையினரின் கல்விச் செயற்பாடுகளில் காணப்பட்ட குறைபாடுகள் **நான்கினை** எழுதுக.
(iii) இயேசு சபையினரின் கல்விச் செயற்பாட்டில் காணப்பட்ட சிறப்பம்சங்கள் **நான்கு** தருக.
(iv) ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் நடாத்தப்பட்ட அனாதைப் பாடசாலைகள் பற்றிய **நான்கு** விடயங்களை எழுதுக.
(v) ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு வருகைதந்த புரட்டஸ்தாந்து மிசனறி சபைகள் **நான்கினைப்** பெயரிடுக.

(4 × 5 = 20 புள்ளிகள்)

## பகுதி II

**4.** பவுலின் திருமுகங்களில் காணப்படும் முக்கியமான படிப்பினை இறையருளாகும்.

(i) தூய பவுல் தமஸ்கு நகருக்குச் செல்லும் வழியில் பெற்ற அனுபவம் இறையருளின் அனுபவமாகும் என்பதனை விளக்குக.

(ii) “மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள இறையருள் என்பது கிறிஸ்துவின் தியாக மரணம், உயிர்ப்பின் பயனாக வழங்கப்பட்ட கொடையாகும்.” ஆராய்க.

(iii) இறையருள் யூதர்களுக்கும் அனைத்து உலக மாந்தருக்கும் கிடைத்த சிறப்பான கொடையாகும் என்பதனை எடுத்துக்காட்டுக.

(iv) இறையருளால் நிரப்பப்பட்டவர்கள் என்ற வகையில் கிறிஸ்தவர்கள், எவ்வாறு உண்மைக்குச் சான்றுபகர வேண்டுமென்பதனை ஆராய்க.

(5 × 4 = 20 புள்ளிகள்)

**5.** கிறிஸ்தவத்தின் வளர்ச்சிக்கும் பரம்பலுக்கும் கிறிஸ்தவ கலைகள் பெரும் பங்களிப்புச் செய்துள்ளன.

(i) சுரங்கக் கல்லறையில் வரையப்பட்ட ஓவியங்களிலிருந்து ஆரம்பக் கிறிஸ்தவர்கள் பெற்ற நன்மைகளை விவரிக்குக.

(ii) கோதிக் கட்டடக்கலையின் முக்கிய பண்புகளை விளக்குக.

(iii) அரங்க நிகழ்வுகளின் ஊடாக இறையரசின் மதிப்பீடுகளை எவ்வாறு பரிசீலனை செய்யலாம் என்பது பற்றி விவரிக்குக.

(iv) பைசாந்திய கட்டடக்கலையின் சிறப்பம்சங்களை விளக்குக.

(5 × 4 = 20 புள்ளிகள்)

**6.** புரட்டஸ்தாந்து சீர்திருத்தமானது திருச்சபையில் பிளவுகள் ஏற்படுவதற்கு வழிவகுத்த போதிலும், திருச்சபையின் ஆன்மீகப் புதுப்பித்தல்களை ஏற்படுத்துவதற்கு உதவியது.

(i) ஜோண் கல்வினின் படிப்பினைகளை விளக்குக.

(ii) புரட்டஸ்தாந்து சீர்திருத்தத்திற்கு வழிகோலிய காரணிகளை எடுத்துக்காட்டுக.

(iii) திரிதெந்தீன் பொதுச்சங்கம் பற்றிச் சுருக்கமாக விவரிக்குக.

(iv) புரட்டஸ்தாந்து சீர்திருத்தத்திற்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட துறவற சபைகளின் மூலம் திருச்சபைக்கு ஆற்றப்பட்ட பணிகளை விளக்குக.

(5 × 4 = 20 புள்ளிகள்)

**7.** கிறிஸ்தவம் அறிமுகம் செய்யப்பட்டமையினால், இலங்கை மக்களின் வாழ்வில் பல்துறைசார் நன்மைகள் ஏற்பட்டன.

(i) இலங்கையில் கத்தோலிக்க மறையைப் பரப்புவதற்குப் போர்த்துக்கேய மிசனறிமார் மேற்கொண்ட நடவடிக்கைகளை விவரிக்குக.

(ii) போர்த்துக்கேயர் ஆட்சியின்போது மிசனறிமார் எதிர்கொண்ட சவால்களை விளக்குக.

(iii) ஒல்லாந்த சீர்திருத்த திருச்சபையைப் பிரபல்யமடையச் செய்வதற்காக பிலிப் பல்தேயுஸ் பாதிரியார் பின்பற்றிய நடைமுறைகளை விளக்குக.

(iv) ஆங்கிலக்கல்வி அறிமுகம் செய்யப்பட்டமையினால் இலங்கைச் சமூகம் பெற்றுக்கொண்ட நன்மைகளை விளக்குக.

(5 × 4 = 20 புள்ளிகள்)

**8.** கிறிஸ்தவ ஒன்றிப்பானது நம்பிக்கைக்குரிய கிறிஸ்தவக் குழுமங்கள் தோற்றம்பெற வழிவகுத்தது.

(i) சீடர்கள் மத்தியில் ஒற்றுமை குறித்த இயேசுவின் போதனை பற்றிச் சுருக்கமாக விவரிக்குக.

(ii) கிறிஸ்தவ ஒன்றிப்பின் வரலாறு பற்றி விளக்குக.

(iii) கிறிஸ்தவ ஒன்றிப்பினை ஏற்படுத்துவதில் கத்தோலிக்க திருச்சபையின் பங்களிப்புகளை எடுத்துக்காட்டுக.

(iv) இலங்கையில் கிறிஸ்தவ ஒன்றிப்பினை விருத்தி செய்வதில் மாணவரொருவர் வழங்கத்தக்க பங்களிப்புகள் பற்றி விளக்குக.

(5 × 4 = 20 புள்ளிகள்)

* * *

# கிறிஸ்தவ நாகரிகம்
# பகுதி II
# அமைப்புக் கட்டுரை I

**01. கிறிஸ்தவ நாகரிகத்தில் செல்வாக்குச் செலுத்திய யூத, கிரேக்க, உரோமைய நாகரிகங்களின் கலாசார கூறுகளையும், குறிப்பாக கிரேக்க, இலத்தீன் மொழியின் சிறப்பினையும் பயன்பாடுகளையும் பற்றிய மாணவர்களின் அறிவைப் பரீட்சித்தல்.**

**i. யூத கலாசாரத்தின் மீது எகிப்திய, மொசபொத்தேமிய நாகரிகங்கள் செலுத்திய தாக்கங்கள் நான்கினைத் தருக.**

**எகிப்திய நாகரிகத்தின் தாக்கம்**

- மரணத்தின் பின் வாழ்வு உண்டு என்ற நம்பிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- பெரும்பாலும் ஆட்சி உரிமை தந்தையிடமிருந்து மகனுக்கு கிடைப்பதாக கருதப்பட்டு கைமாறப்பட்டது.
- ஆட்சி அதிகாரம் தெய்வத்திடம் இருந்து அரசனுக்கு கிடைத்திருப்பதாக நம்பினர்.
- நிருவாகம், சமயம், பொருளாதாரம், பரிபாலனம் என்ற வகையில் ஆட்சிக்கடமைகள் ஒன்றிணைக்கப்பட்டிருந்தன.
- பைபிரஸ் என்ற புல் கடுதாசியாக எழுதப் பயன்படுத்தப்பட்டது.
- செதுக்கல் வேலைப்பாடுகள், சிற்பங்கள், சித்திரங்கள், உருவ எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டன.
- ஆண்டுகள், மாதங்கள், தினங்கள் கணிக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டன.

**மொசபொத்தேமிய நாகரிகத்தின் தாக்கம்**

- கலண்டர் முறை பயன்படுத்தப்பட்டமை.
- கனவுகளுக்கு பலன் கூறும் பழக்கம்.
- விவசாயம், விலங்கு வளர்ப்பு முறைகள் தோற்றம் பெற்றன.
- ஆட்சி நிர்வாகத்தைக் கொண்டு நடத்துவதற்குரிய வருமானம், வரி அறவிடுவதன் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பணம் மூலமான கொடுக்கல் வாங்கல்கள் நடைபெற்றமை.
- கட்டிடக்கலை, செதுக்கல் வேலைகள் பின்பற்றப்பட்டமை.
- மூலிகை மருத்துவ முறை பின்பற்றப்பட்டமை.

**ii. கிரேக்க நாகரிகத்தின் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.**

- அறிவியல் வளர்ச்சிக்கும், பல விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுக்கும் காரணமாய் அமைந்தமை.
- அரசியல், மெய்யியல், தர்க்கம், பௌதீகம், புவியியல், வானிலை, கணிதம், கேத்திர கணிதம், இலக்கியம், கலை, மருத்துவம், விளையாட்டு என பல துறைகளிலும் பங்களிப்பு செய்துள்ளது.
- பகுத்தறிவின் அடிப்படையில், விடயங்களைப் புரிந்து முடிவுகளை எடுக்கும் முறையை அறிமுகம் செய்து வைத்தார்கள்.

- தனிமனித ஆற்றலை வளர்த்து எடுப்பதற்கு உடற்பயிற்சி, விளையாட்டுப் போட்டிகள் திறமையாக நடைபெற வழிவகுத்தமை.
- விளையாட்டுப் போட்டிகளில் திறமையாக செயற்பட்டோர் கௌரவித்தல்.
- இராணுவப் பயிற்சி செயற்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கியமை.
- சிறந்த போர் வீரர்களாகவும், ஆளுமையுள்ளவர்களாகவும், பேச்சுக்கலையில் வல்லவர்களாகவும் வளர்ச்சி பெற்றனர்.
- மெய்யியல் சிந்தனைகளை உலகிற்கு வழங்கினர்.

**iii. உரோமைய நாகரிகத்தின் குணாதிசயங்கள் நான்கினை எழுதுக.**

- இம் மக்கள் இந்தோ, ஐரோப்பிய குடும்பத்தை சேர்ந்தவர்களாவார்.
- விவசாயத்திலும், போர் பயிற்சியிலும் சிறப்புற்று விளங்கினர்.
- தமது ஆட்சியை இன்றும் விஸ்தரிப்பு செய்வதற்காக முனைந்து செயற்பட்டமை.
- படை நடவடிக்கைகளினால் பரந்த பெரிய இராட்சியமாக மாற்றம் பெற்றமை.
- ஆட்சி மொழியாகவும் நிர்வாக மொழியாகவும் இலத்தின் மொழி காணப்பட்டமை.
- பல ஐரோப்பிய மொழிகளுக்கு தாய் மொழியாக இலத்தின் கருதப்பட்டமை.
- கட்டடக்கலை சிறப்புற்று விளங்கியமை.

**iv. திருச்சபை கிரேக்க மொழியைப் பயன்படுத்தியதால் கிடைத்த நன்மைகள் நான்கினைக் குறிப்பிடுக.**

- பழைய ஏற்பாடு கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டமை.
- கிரேக்க மொழியில் திருமுகங்கள், நற்செய்தி நூல்கள் எழுதப்பட்டமை.
- கிரேக்க மெய்யியல் சிந்தனைகள் புதிய சிந்தனைக்கு வழிவகுத்தமை.
- கி.பி 1 ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவம் உரோமையை பேரரசு முழுவதும் பரவ வழி கிட்டியமை.
- திருச்சபைத் தந்தையர்கள் கிரேக்க மொழியில் இலக்கியங்களை உருவாக்கியமை.
- புனித யோவான், புனித பவுல் தமது இறையியலை விளக்குவதற்கு கிரேக்க மொழி உதவியது.

**v. திருச்சபை இலத்தீன் மொழியைப் பயன்படுத்தியதால் கிடைத்த நன்மைகள் நான்கினைக் குறிப்பிடுக.**

- திருவிவிலியம் இலத்தின் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டமை.
- இரண்டாம் வத்திக்கான் சங்கம் வரை வழிபாட்டு மொழியாக இலத்தின் மொழி விளங்கியமை.
- பல கிறிஸ்தவ இலக்கியங்கள் இலத்தின் மொழியில் எழுதப்பட்டமை.
- திரு இசைப்பாடல்கள் இலத்தின் மொழியில் பாடப்பட்டன.
- திருச்சபையின் நிர்வாக மொழியாக பயன்படுத்தப்பட்டது.
- 1962 ஆம் ஆண்டு வரை பெரிய குருமடங்களில் போதனா மொழியாக விளங்குகியது.

**02. மிலான் சாசனத்தின் உறுப்புரைகள், மனிக்கேயப் பேதகப் படிப்பினைகள், மத்திய காலத்திருச்சபையின் ஆன்மீக சீரழிவுக்கு ஏதுவான காரணிகள், கார்மேல் துறவற சபையைச் சீர்செய்யும் நோக்கில் செயற்பட்ட புனித சிலுவை யோவானால் எழுதப்பட்ட நூல்கள், ஐரோப்பாவில் கிறிஸ்தவம் பரவிய வழிமுறைகள் தொடர்பான அறிவைப் பரீட்சித்தல்.**

**i. மிலான் சாசனத்தின் உறுப்புரைகள் நான்கினைக் குறிப்பிடுக.**

- திருச்சபைக்கு மதச் சுதந்திரம் வழங்கப்பட்டது.
- குருக்கள் வரி செலுத்தத் தேவையில்லை.
- நன்கொடைகளையும் சொத்து, தானங்களையும் ஆலயங்கள் ஏற்றுக் கொள்ளலாம்.
- ஞாயிறு தினம் விடுமுறை நாளாகவும் ஓய்வு நாட்களாகவும் பயன்படுத்தப்பட்டது.
- அழிக்கப்பட்ட வழிபாட்டு இடங்களுக்குப் பதிலாக பிரமாண்டமான ஆலயங்கள் கட்டி எழுப்பப்பட்டன.
- திருத்தந்தைக்கு இலத்தரன் அரண்மனையும் உபகாரச் சம்பளமும் கிடைத்தன.
- ஆயர்களின் அதிகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- சிலுவையில் அறைந்து குற்றவாளிகளை கொல்வது தடை செய்யப்பட்டது.
- அங்கவீனமான சிசுக்கொலை தடை செய்யப்பட்டது.
- பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்கள் கிறிஸ்தவர்களிடம் திருப்பிக் கொடுக்கப்பட்டது.

**ii. மணிக்கேய பேதகத்தின் படிப்பினைகள் நான்கு எழுதுக.**

- இரு அரசுகள் உள்ளன – (ஒளி, இருள்)
- ஒளியின் அரசு கடவுளைச் சார்ந்தது, இருளின் அரசு சாத்தானைச் சார்ந்தது.
- மனிதன் ஒளிக்கும் இருளுக்குமிடையில் அகப்பட்டுள்ளான்.
- மனிதனிடம் ஒளியின் சில சுடர்கள் இருளில் மறைந்துள்ளன.
- ஒளிச்சுடரை மீட்க இயேசுவும் புனித பவுலும் அனுப்பப்பட்டனர்.
- சாத்தான் ஆதாமைப் படைத்தான்.

**iii. மத்திய காலத்தில் திருச்சபையின் ஆன்மீகச் சீரழிவுக்கு ஏதுவான காரணிகள் நான்கினைத் தருக.**

- பரிபூரண பலன்கன் பற்றிய தவறான போதனை.
- ஆன்மீகப் புத்துணர்ச்சி முழுமையாக நிறைவேறவில்லை.
- மத்திய யுகத்தில் ஆட்சியாளர்களை நியமித்தல், யுத்த நடவடிக்கைகளில் ஈடுபடல், வரி வசூலித்தல், போர் வீரர்களைப் பலப்படுத்தல், பணம் சொத்துக்களைத் திரட்டுதல், அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடல் போன்ற லௌகீக தேவைகளுக்கு திருச்சபை முக்கியத்துவம் கொடுத்தல்.
- ஆயர்களின் குருக்களின் ஆடம்பரமான வாழ்வு, சுயநலவாழ்வு, பணப்பேராசை.
- கல்வியறிவற்ற மக்களுக்கு மறையைப் போதிக்காததால் மக்களின் பக்தி குறைந்து ஆன்மீக வாழ்வில் தளர்ச்சி ஏற்பட்டமை.
- துறவிகள் துறவறத்தையும் விசுவாசத்தையும் கைவிட்டுப் பணம் சேகரிக்கவும் அரச இலாபத்தைத் தேடுவதிலும் ஈடுபட்டனர்.

- அரசிற்கும் திருச்சபைக்குமிடையிலான முரண்பாடு.
- திருச்சபை அதிகம் அரசியலில் ஈடுபட்டமை.
- திருச்சபை இராணுவத்தைப் பயன்படுத்தி வரிகள் வசூலித்தமை.
- திருச்சபைத் தலைவர்களின் உலகியல் போக்கு
- திருச்சபையில் பல பிரிவினைகளும் பேதகங்களும் காணப்பட்டமை.
- சாதாரண மக்களுக்குப் போதிய சமய அறிவு அளிக்கப்படாமை.
- கற்ற பொதுநிலையினரால் புதிய கருத்துக்கள் பரப்பப்பட்டமை.
- குழுக்களும், துறவிகளும் பணம் சேகரிப்பதில் அதிக நாட்டம் காட்டியமை.

**iv. புனித சிலுவை அருளப்பரால் எழுதப்பட்ட நூல்கள் நான்கினைப் பெயரிடுக.**

- கார்மேல் மலையேற்றம்
- ஆன்மாவின் இருள் இடர் இரவு
- ஆன்மீக கீதம்
- தெய்வீக அன்பின் உயிருள்ள சுவாலை

**v. ஐரோப்பாவில் கிறிஸ்தவம் பரவிய வழிமுறைகள் பற்றிய நான்கு விடயங்களை எழுதுக.**

- புனித ஆசீர்வாதப்பர் சபையினரின் பங்களிப்பு
- கிறிஸ்தவ மறைப்பாளர்கள் பல்வேறு நாடுகளுக்கு அனுப்பப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| புனித கிரகோரியார் | – | இங்கிலாந்து |
| புனித பற்றிக் | – | அயர்லாந்து |
| புனித பொனிபாஸ் | – | ஜேர்மனி |
| புனித கொலம்பா | – | ஸ்கொட்லாந்து |
| புனித ஆன்ஸ்கா | – | டென்மார்க், சுவீடன் |
| அரசர் ஓலிப் திரிக்லாசன் | – | நோர்வே ஐஸ்லாந்து |

- ஸ்லாப் நாடுகள் – சிறில், மெத்தோடியஸ்
- மன்னன் குளோவிஸ் குளோத்தில்டாவை மணந்தது, மனமாற்றம் பெற்று கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டமை.
- மிலேச்சர்களை மனமாற்றியமை.
- பெரிய சார்ளிமென் மன்னன் மேற்கொண்ட செயற்பாடுகள்.

**03. இலங்கைக்கு வருகை தந்த மறைப்பரப்பாளர்களான பிரான்சிஸ்கன் சபை, இயேசு சபையினரின் கல்விச் செயற்பாடுகளின் நிறைகளையும், குறைகளையும், ஒல்லாந்த காலத்து அனாதைப் பாடசாலைகளின் செயற்பாடுகள், ஆங்கிலேயர் ஆட்சியின் போது இலங்கைக்கு வருகை தந்த ஆங்கில நாட்டு பிசனரிமார் பற்றிய மாணவர்களின் அறிவை மதிப்பீடல்.**

**i. பிரான்சிஸ்கன் சபையினரின் கல்விப் பணிகளில் காணப்பட்ட நேர்ப்பாங்கான பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.**

- கல்வி மூலம் கத்தோலிக்க மறையைப் பரப்புதல்.
- கோட்டையிலும் யாழ்ப்பாணத்திலும் மூன்று வகையான பாடசாலைகளை நிறுவினர்.
- ஒரு பங்கிற்கு ஒரு பாடசாலை என்ற ரீதியில் கோவிற்பற்றுப் பாடசாலைகளை அமைத்தனர்.
- சுதேச மொழிகளில் கற்பித்தனர்.
- ஐரோப்பிய கல்வி முறையிலான உயர் கல்வி வழங்கப்பட்டது.
- கல்லூரிகளில் சமயச் சார்புடைய கல்வியை வழங்கியமை.
- அரசர்களுக்கான கல்விக்கூடம் நடைமுறைப்படுத்தப்பட்டமை.
- மறைப்பரப்பாளர்களால் வாசிப்பு, கத்தோலிக்க நெறி போன்றன கற்பிக்கப்பட்டன.

**ii. பிராஸ்சிஸ்கள் சபையினரின் கல்விச் செயற்பாடுகளில் காணப்பட்ட குறைபாடுகள் நான்கினை எழுதுக.**

- கத்தோலிக்கரின் எண்ணிக்கைக்கேற்ப பாடசாலைகள் அதிகரிக்கபடாமை.
- நாடு முழுவதும் உயர்கல்லூரிகள் மூன்று மாத்திரமே காணப்பட்டமை.
- பாடசாலைகள் அனைத்தும் சமயக் கல்வியை மையமாகக் கொண்டு இயங்கின.
- ஆரம்பப் பாடசாலைகளும் உயர்நிலைப் பாடசாலைகளும் காணப்பட்ட வேளை இடைநிலைப் பாடசாலைகள் காணப்படவில்லை.
- போதிய மனித வளம் இல்லாமை.
- போதிய பௌதிக வளம் இல்லாமை.

**iii. இயேசு சபையினரின் கல்விச் செயற்பாட்டில் காணப்பட்ட சிறப்பம்சங்கள் நான்கு தருக.**

- மீண்டும் மீண்டும் சொல்லிக் கொடுத்தல் முறைமை கடைப்பிடிக்கப்பட்டமை.
- வினாவிடை முறையில் கற்பித்தல்.
- ஞானக்கீத இசைப்பின் மூலம் விடயங்களை அறிவுறுத்தல்.
- நாடகங்கள், கட்புலன், செவிப்புலன் ஆகிய முறைகளைப் பயன்படுத்தல்.
- மிசனரிமார் தென்னிந்தியாவிலிருந்தும் வந்தமையால் தமிழை நன்கு பயன்படுத்தக் கற்றிருந்தனர்.
- மதக்கல்வியோடு கணிதம், வாசிப்பு, எழுத்து, இலக்கியம், நல்நடத்தை ஆகிய விடயங்களையும் கற்றுக் கொடுத்தனர்.

**iv. ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் நடாத்தப்பட்ட அனாதைப் பாடசாலைகள் பற்றிய நான்கு விடயங்களை எழுதுக.**

- ஆண், பெண் இருபாலரும் கல்வி கற்றனர்.
- எழுத்து, வாசிப்பு, எண்கணிதம், சமயம் என்பன கற்பிக்கப்பட்டன.
- ஆண் பிள்ளைகளுக்கு வர்த்தகமும், பெண் பிள்ளைகளுக்கு வீட்டு வேலைகள், தையல், பின்னல் என்பனவும் கற்பிக்கப்பட்டன.
- இப்பாடசாலைகள் அரச செலவில் நடாத்தப்பட்டன.
- 08 – 15 வயதிற்கு இடைப்பட்டவர்களுக்கு கட்டாயக் கல்வி நடைமுறைப்படுத்தப்பட்டது.
- 18 – 20 வயதிற்குட்பட்டோர் பாடசாலையிலிருந்து வெளியேறினர்.

**v. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இலங்கைக்கு வருகை தந்த புரட்டஸ்தாந்து மிசனறி சபைகள் நான்கினைப் பெயரிடுக.**

- லண்டன் மறைத்தூதுக் குழு
- பப்ரிஸ் மிசனறி சபை
- வெஸ்லியன் மிசனறி சபை
- அமெரிக்கன் மிசனறி சபை
- திருச்சபை மறைத்தூதுச் சங்கம்
- இரட்சணிய சேனை

# கிறிஸ்தவ நாகரிகம்
## பகுதி – II

**04. புனித பவுல் தமஸ்கு நகருக்குச் செல்லும் வழியில் பெற்ற இறையருளின் அனுபவம், அதனடிப்படையில் இறையருள் கிறிஸ்துவின் தியாக மரணம், உயிர்ப்பு என்பவற்றின் பயனாக கிடைத்த மாபெரும் கொடை என்பது பற்றிய புனித பவுலின் கருத்துக்கள், இறையருளால் நிரப்பப்பட்ட கிறிஸ்தவர்கள் உண்மைக்குச் சான்று பகர வேண்டும் என்பவை தொடர்பான மாணவர்களின் அறிவைப் பரீட்சித்தல்.**

**i. தூய பவுல் தமஸ்கு நகருக்குச் செல்லும் வழியில் பெற்ற அனுபவம் இறையருளின் அனுபவமாகும் என்பதனை விளக்குக.**

- இறையருளை உணர்த்த பவுல் பயன்படுத்தும் சொல் "காரிஸ்" என்பதாகும். அது 'இரக்கம்' அல்லது 'அன்பு' எனப் பொருள்படும்.
- ஒரு யூதன் மோசேயின் சட்டங்களை நுணுக்கமாகக் கடைபிடித்து வாழ்வதன் மூலம் இறையருளை பெற்றுக்கொள்ள முடியும் என்பது யூதமத நம்பிக்கை.
- இந்நம்பிக்கையில் வாழ்ந்த புனித பவுல் தமஸ்கு நகருக்குச் செல்லும் வழியில் உயிர்த்த கிறிஸ்துவைச் சந்திக்கின்றார். இது அவர் பெற்ற இறையருளின் அனுபவமாகும்.
- இதனைப் பற்றி பவுல் கூறும் போது முதலில் திருத்தூதர்களும் பின்னர் 500 இற்கும் அதிகாமானோருக்கு காட்சி கொடுத்த இயேசுக் கிறிஸ்து கடைசியில் காலம் தப்பிப் பிறந்த குழந்தை போன்ற எனக்கும் தோன்றினார். (1 கொரி 15 : 8) என்கிறார்.
- இவ் அனுபவம் அவர் ஏற்கனவே கொண்டிருந்த இறையருள் பற்றி கருத்தியயலில் பாரிய மாற்றத்தை உண்டு பண்ணுகின்றது.
- எனவே தான் திருசட்டத்தைக் கடைப்பிடிப்பதால் அல்ல, மாறாக இயேசுக் கிறிஸ்துவில் கொள்ளும் நம்பிக்கையினாலேயே இறையருளைப் பெறமுடியும் என்கிறார்.
- அத்துடன் இறையருள் இயேசுகிறிஸ்து வழியாக இறைவனால் இலவசமாக வழங்கப்பட்ட ஒரு கொடை அது எமது சொந்த முயற்சியினால் கிடைப்பதல்ல என்கிறார்.

**ii. மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள இறையருள் என்பது கிறிஸ்துவின் தியாக மரணம், உயிர்ப்பின் பயனாக வழங்கப்பட்ட கொடையாகும் ஆராய்க.**

- புனித பவுல் சட்டத்தை நுணுக்கமாக கடைப்பிடித்ததன் மூலம் மீட்புப் பெறலாம் எனும் நம்பிக்கையில் வாழ்ந்தவர்.
- எனினும் அவருடைய மனமாற்றம் இந்த நம்பிக்கையை தலைகீழாக மாற்றியது. சட்டத்தினால் அல்ல இறைவனின் இலவசமான கொடையினாலேயே மீட்பைப் பெற முடியும் எனும் உண்மையை அனுபவ வாயிலாக உணர்ந்துக்கொண்டார்.
- புனித பவுல் மக்களுக்கு வழங்கப்பட்ட இறையருள் என்பது இறைவன் கிறிஸ்து வழியாக வழங்கிய இலவசக் கொடை என்கின்றார்.
- இறையருள் இயேசுக் கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு வழியாக எம்மை வந்தடைகின்றது.
- கிறிஸ்து கல்வாரியில் தம் இரத்தத்தை சிந்தி எம் எல்லோரையும் பாவத்தில் இருந்து மீட்டெடுத்திருக்கினார்.
- அது இயேசுக் கிறிஸ்துவின் தியாகச் செயல்.

- கிறிஸ்துவின் கல்வாரிப் பலியே நமது மீட்பின் ஏற்புடையதாதலின் கருவி.
- கிறிஸ்து உயிர்த்தெழுந்ததன் மூலம் எமக்கெல்லாம் புது வாழ்வு அருளப்பட்டுள்ளது.
- எனவே இயேசுக் கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்வதன் மூலம் இறையருளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

iii. **இறையருள் யூதர்களுக்கும் அனைத்து உலக மாந்தர்களுக்கும் கிடைத்த சிறப்பான கொடையாகும் என்பதை எடுத்துக்காட்டுக.**

- யூதர்கள் தங்களுக்கு மட்டுமே மீட்பு உண்டு, புறவினத்தார் மீட்புக்குரியவர்கள் அல்லர் என்னும் கருத்தியலில் வாழ்ந்தவர்கள். எனினும் கிறிஸ்து அனைத்து மக்களுக்கும் மீட்பு உண்டு என்பதை தம்முடைய போதனை வழியாகவும் பணி வாழ்வின் வழியாகவும் எடுத்துரைத்தார்.
- இறையருள் யூதர்களுக்கும் அனைத்து உலக மாந்தர்களுக்கும் கிடைத்த சிறப்பான கொடையாகும். ஏனெனில் யூதர்கள் சரி, புறவினத்தவர் சரி, நாம் அனைவரும் மீட்புப் பெறுவது, இறைவன் முன் ஏற்புடையவர்களாவது சட்டத்தினால் அல்ல. சட்டம் சார்ந்த செயல்களினாலுமல்ல. மாறாக இயேசுக் கிறிஸ்துவில் நாம் கொள்ளும் விசுவாசத்தினாலே தான்.
- மீட்பு விலை கொடுத்து வாங்கப் பெற்றது.
- கிறிஸ்துவின் கல்வாரிப் பலியே தமது விடுதலையின், மீட்பின், கடவுளுக்கு ஏற்புடையவராக்குதலின், கடவுளால் நீதிமானாகக் கணிக்கப்படுதலின் கருவியாகும். அதற்காகக் கொடுக்கப்பட்ட விலையாகும்.
- ஆபிரகாம் தம் விசுவாசத்தினால் கடவுளுக்கு ஏற்புடையவரானது போல நாமும் இறைவன் ஆபிரகாமிற்கு வாக்களித்து இப்போது அனுப்பியுள்ள இயேசுக் கிறிஸ்துவின் விசுவாசம் கொள்வதாலேயே இறைவனுக்கு ஏற்புடையவராக்கப்படுகின்றோம்.
- கலாத்தியர் சட்டத்தைப் பற்றியே கேள்விப்படாமலே இருந்த வேளையிலே தூய ஆவியைப் பெற்றுக்கொண்டார்கள். அதற்குக் காரணம் இறைவனில் கொள்ளும் விசுவாசம்.
- மீட்பு இறைவனின் இலவசக் கொடை, இறையருள். யூதரும் புறவினத்தவரும் பாவம் செய்து கடவுள் கொடுத்த மேன்மையை இழந்தனர். ஆயினும் கிறிஸ்து இயேசு நிறைவேற்றிய மீட்புச் செயலின் மூலம் கடவுளுடைய அருளால் இலவசமாய் அவருக்கு ஏற்புடையவர்கள் ஆக்கப்படுகின்றார்கள்.
- எனவே யூதர்களுக்கும் அனைத்து உலக மாந்தருக்கும் கிடைத்த சிறப்பான கொடை இறையருளாகும். இது ஒரு இலவசக்கொடையாகும்.

iv. **"இறையருளால் நிரப்பப்பட்டவர்கள் என்ற வகையில் கிறிஸ்தவர்கள், எவ்வாறு உண்மைக்குச் சான்றுபகர வேண்டுமென்பதை ஆராய்க.**

- கிறிஸ்து உண்மைக்கு சான்று பகர்வதே தமது பணி என்றும், உண்மைக்கு சான்று பகர்வதற்காகவே தந்தையினால் அனுப்பப்பட்டவர் என்றும் எடுத்துரைத்தார்.
- இறையருளால் நிரப்பப்பட்டவர்கள் என்ற வகையில் கிறிஸ்தவர்கள் விசுவாசத்தின் அடிப்படையில் உண்மைக்கு சான்று பகர்தல் வேண்டும்.
- இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பிற்கு சான்று பகர்தலின் வெளிப்படை அடையாளம்.
- பவுல் தமஸ்கு அனுபவத்தின் மூலம் இயேசுவலின் மேல் கொண்ட விசுவாசத்தினால் எத்தகைய துன்பங்கள், சவால்கள் மத்தியிலும் உண்மைக்கு சான்று பார்தல்.
- நாம் இரக்கம் சார்ந்த செயல்களில் ஈடுபடல்.

- நீதிக்காக, உண்மைக்காக இனமத பேதமின்றி குரல் கொடுத்தல்.
- உண்மைக்கு எதிராக செயற்படுவோருக்கு எதிராகக் குரல் கொடுக்கும் போது அதனால் ஏற்படும் துன்பங்களைத் தாங்கிக் கொள்ளல்.
- இன, மத, மொழி பேதமின்றி சமத்துவம், சகோதரத்துவம் என்ற வகையில் வாழுதல்.

**05. சுரங்கக் கல்லறைகளில் வரையப்பட்ட ஓவியங்களில் இருந்து ஆரம்ப கிறிஸ்தவர்கள் பெற்ற நன்மைகள், கோத்திக் கட்டடக்கலையின் முக்கிய பண்புகள், அரங்க நிகழ்வுகளின் ஊடாக இறையரசின் மதிப்பீடுகள் பரப்புரை செய்யப்பட்ட விதம், பைசாந்தியக் கட்டடக்கலையின் சிறப்பம்சங்கள் தொடர்பான மாணவர்களின் அறிவை மதிப்பீடு செய்தல்.**

**i. சுரங்கக் கல்லறையில் வரையப்பட்ட ஓவியங்களிலிருந்து ஆரம்பக் கிறிஸ்தவர்கள் பெற்ற நன்மைகளை விவரிக்குக.**

- முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் கிறிஸ்தவர்கள் துன்பங்களுக்கு முகம் கொடுத்தனர்.
- இதனால் அவர்கள் மத வழிபாடுகளில் பகிரங்கமாக பங்கு கொள்ள முடியாத சூழல் காணப்பட்டது. இப்பின்னணியில் இரகசியமாக சுரங்க அறைகளில் தங்கி மத நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.
- அங்கு கிறிஸ்தவர்கள் மாத்திரம் விளங்கிக் கொள்ளக்கூடிய கிறிஸ்தவ அடையாளங்களைப் பயன்படுத்தினர்.

  உதாரணம் : மீன் – கிறிஸ்து
- இவை இரகசியமாகவும் விரைவாகவும் கலை நிபுணத்துவம் இல்லாத கைகளால் வரையக்கூடியதாகக் காணப்பட்டன.
- ஓவியங்களில் திருவிவிலியக் கதைகள் அடங்கியிருந்தன.
- ஆதிக்கிறிஸ்தவர்களின் விசுவாச வாழ்வை எடுத்துக் காட்டின.
- இவ்வாறான வாழ்க்கை முறை ஆரம்பக் கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தை வாழ்வதற்கும் வெளிப்படுத்துவதற்கும் உதவியாக அமைந்தன.

**ii. கோதிக் கட்டடக்கலையின் முக்கிய பண்புகளை விளக்குக.**

- கோதிக் கட்டடக்கலை 12 ஆம் நூற்றாண்டில் வட பிரான்சில் தோன்றியது.
- அரைவட்ட முகப்புக்குப் பதிலாக கூரான முகப்பு அமைக்கப்பட்டது.
- முதலில் தட்டை அமைப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.
- தேவையான அளவிற்கு தூண்களை அமைத்து, பின்பு கூரையைத் தாங்குவதற்கு மேல் நடுவில் கூரான முகப்பைப் பொருத்தினர்.
- ஆலய உட்பகுதி உரோமைய ஆலயத்தைப் போன்று இரண்டு வரிசைத் துண்டுகளால் ஆனது. ஆதலால் ஆலயத்தின் நிலப்பகுதி அகலமான மத்திய மண்டபமாகவும் ஒடுங்கிய இரண்டு பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டன.
- கூரான முகப்பும், பூ வடிவிலான ஜன்னலும் இவ்வாலங்களின் விசேட அம்சமாகும்.
- நிறக்கண்ணாடிப் பாவனையும் சமநிலையைப் பாதுகாக்க மூலைகளைப் பொருத்துவதும் சிற்ப அலங்காரங்களைச் செய்வதும் கோத்திக் ஆலயத்தின் இன்னுமோர் சிறப்பம்சம்.
- பிரான்சிலுள்ள “நோதிர டாம் ஆலயம்” இக் கட்டடக்கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டு.

iii. **அரங்க நிகழ்வுகளின் ஊடாக இறையரசின் மதிப்பீடுகளை எவ்வாறு பரீசீலனை செய்யலாம் என்பது பற்றி விவரிக்குக.**

- மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்ட நிகழ்வுகள் தயார் செய்யப்படுதல் ஒரு சில வழியாகும்.
- இறையரசின் மதிப்பீடுகளை எடுத்துச் சொல்லும் சிறந்த ஊடகமாக அரங்க நிகழ்வுகள் விளங்குகின்றன.
- இறையரசின் மதிப்பீடுகளாக அன்பு, நீதி, சமாதானம், மன்னிப்பு, சகோதரத்துவம் என்பன சில எடுத்துக்காட்டுகள்.
- கிறிஸ்தவ அரங்க நிகழ்வுகள் திருவிவியக் கதைகளையும் புனிதர்களின் வரலாறுகளையும் மையமாகக் கொண்டமைந்தமை இவற்றின் நோக்கம்.
- இவை மேற்படி மதிப்பீடுகளை மையமாகக் கொண்டன.
- கிறிஸ்துவில் கொண்ட விசுவாசத்திற்கும் நற்செய்தியின் விழுமியங்களுக்கும் சான்று பகர்ந்து துன்பங்களை எதிர்கொண்ட புனிதர்கள் தம் தியாகத்திற்கு கைம்மாறு பெற்றது போன்று கிறிஸ்தவர்களும் தாம் எதிர்கொள்ளும் துன்பங்களுக்கு கைமாறு பெறுவர் என்னும் படிப்பினையைப் பெற்றுக் கொள்ளலாம்.
- புனிதர்கள் மட்டில் பக்தியையும் மரியாதையும் மக்கள் மத்தியில் இந்நிகழ்வுகளுக்கூடாக வழங்கப்பட்டது.
- கத்தோலிக்க மதத்தின் விழுமியங்களையும் கொள்கைகளையும் இந்த அரங்க நிகழ்வுகளினூடாக வெளிப்படுத்தி இறையரசின் மதிப்பீடுகளை மக்களுக்கு தெளிவுப்படுத்தலாம்.
- அரங்க நிகழ்வுகளினூடாக நாடக ஆர்வத்தை மக்களுக்கு வழங்குவது மட்டுமல்ல, கத்தோலிக்கர்களிடையே மிகவும் இலகுவான முறையில் கத்தோலிக்கப் படிப்பினையை வழங்கி, கத்தோலிக்கரை ஊக்குவிப்பதனூடாக இறையரசின் மதிப்பீடுகளை வெளிக்கொணரலாம்.

iv. **பைசாந்திய கட்டடக்கலையின் சிறப்பம்சங்களை விளக்குக.**

- நான்காம் நூற்றாண்டில் உரோமையைப் பேரரசு மேற்கு, கிழக்கு எனப் பிளவுற்றதனால் கட்டடக்கலையிலும் வேறுபாடு தோன்றியதோடு வளர்ச்சியடைந்த கட்டடக்கலை பைசாந்தியக் கட்டடக்கலை எனப்பட்டது.
- இது கிழக்குப் பகுதியில் தோன்றியது.
- நீண்ட கட்டடங்களுக்குப் பதிலாக வளைந்த வட்ட வடிவிலான அல்லது மைய அமைப்பிலான ஆலயங்கள் தோன்றின.

**இதன் சிறப்பம்சங்கள்**

- நேரான அமைப்பை விட வளைந்த உறுதியான அமைப்பைக் கொண்டது.
- தட்டையான கூரையை விட அரைவட்ட முகப்பு அமைக்கப்பட்டுள்ளது.
- பூரண ஒளியை விட மங்களான ஒளியைப் பயன்படுத்தினர்.
- ஆலயங்களின் மத்திய பகுதி முழுவதும் தூணோ அல்லது சாய்தளமோ இல்லை.
- வில்லு வடிவான முகப்பும் அரைவட்ட வடிவான கூரையும் நீர்த்துளி போன்ற கூரையும் அமைக்கப்பட்டிருந்தது. (டோம்)
- உட்பகுதியில் குறைந்த வெளிச்சத்தைக் கொண்டது.
- ஆலயத்தின் உட்புறத்திலுள்ள பலிப்பீடம், ஆலயத்தின் மையப்புறத்தில் இருந்து ஒரு திரைச் சீலை யினால் பிரிக்கப்பட்டிருந்தது.
- கொன்ஸ்தாந்திநோபில் அமைக்கப்பட்ட புனித சொபியா ஆலயம் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு

**06. புரட்டஸ்தாந்து சீர்த்திருத்திற்கு வழிகோலிய காரணிகள், ஜோண் கல்வினின் படிப்பினைகள், திரிதெந்தீன் பொதுசங்கம், புரட்டஸ்தாந்து சீர்த்திருத்தத்திற்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட துறவற சபைகள் மூலம் திருச்சபைக்கு ஆற்றப்பட்ட பணிகள் பற்றிய மாணவர்களின் அறிவை மதிப்பீடு செய்தல்.**

**i. ஜோண் கல்வினின் படிப்பினைகளை விளக்குக.**

- ஜோண் கல்வின் கத்தோலிக்க மறையை முன்பு பின்பற்றியவர்.
- பின்னர் இவர் லூதரின் போதனைகளைப் பின்பற்றினார்.
- “கிறிஸ்தவ மதக்கோட்பாடுகள்” எனும் நூலை வெளியிட்டார்.
- இந்நூல் நான்கு பகுதிகளைக் கொண்டது. படைத்தவரான இறைவன், கிறிஸ்துவின் இறைவன் வழங்கும் மீட்பு, தூய ஆவி, திருச்சபை
- ஆதாமின் வீழ்ச்சியினால் மனிதன் தன் சுயமான உரிமையை இழந்து விட்டதால் இறைவனின் அடிமையாகி விட்டான்.
- இறைவன் எவரை முன் குறித்து வைத்தாரோ அவரே விண்ணகம் செல்வர்.
- கல்வியை ஊக்குவிக்கும் வகையில் ஜெனிவாவில் பல்கலைக்கழகம் ஒன்றை ஆரம்பித்தார்.
- திருவிவிலிய உண்மைகளைப் போதிக்கக்கூடிய கல்வி அறிவு கொண்ட குழுக்களையும், அவற்றை விளங்கிக் கொள்ளக்கூடிய பொது நிலையினரையும் உருவாக்கும் நோக்கில் பாடசாலைகளை ஆதரித்தார்.
- மறைக்கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து போதிப்பதிலும், கற்பிப்பதிலும், எழுதுவதிலும், கடிதத் தொடர்பு கொள்வதிலும் சட்டம் சார்பாகவும், நிருவாகம் சார்பாகவும் அறிவுரை கொடுப்பதிலும் முன்னணியில் இருந்தார்.

**ii. புரட்டஸ்தாந்து சீர்த்திருத்தத்திற்கு வலிகோலிய காரணிகளை எடுத்துக்காட்டுக.**

- மத்திய காலத்தில் கத்தோலிக்க திருச்சபை, உரோமைப் பேரரசு என இரண்டு சமூக ஸ்தாபனங்களால் ஆட்சி செய்யப்பட்டது.
- இவ்விரண்டு ஸ்தாபனங்களின் போட்டிகளினால் பல்வேறு முரண்பாடுகளுக்கும் யுத்தங்களுக்கும் வழி வகுத்தது.
- மத்திய யுகத்தில் ஆட்சிப் பொறுப்பிற்கு ஆட்சியாளர்களை நியமித்தல், யுத்த நடவடிக்கைகளில் பங்கெடுத்தல், வரிவசூலித்தல், போர் வீரர்களைப் பயன்படுத்துதல், பணம் சொத்துக்களைத் திரட்டுதல், அரசியற் செயற்பாடுகளில் ஈடுபடுதல் போன்ற லௌகீக தேவைகளுக்கு திருச்சபை முக்கியத்துவம் கொடுத்தல்.
- சமயபேதம், திருச்சபை பேதம், குருக்களின் பிரச்சினைகள் போன்றன இக்காலத்தில் தோன்றின.
- திருத்தூதர் காலத்திருந்த புனித வாழ்வு, பகிர்வு வாழ்வு மறந்து, ஆயர்கள் குருக்களின் ஆடம்பரமான வாழ்வு, சுயநலவாழ்வு, பணப்பேராசை, திருச்சபையின் தூய்மைக்கும் வளர்ச்சிக்கும் தடையாக இருந்தன.
- கல்வி அறிவு இல்லாத மக்களுக்கு குருகுலத்தைச் சேர்ந்தவர்கள் மறையைப் போதிக்காமையால் மக்களின் பக்தி குறைந்து ஆன்மீக வாழ்வில் தளர்ச்சி நிலை காணப்பட்டது.
- திருச்சபையில் மறுசீரமைப்பை ஏற்படுத்துவோம் எனக் கூறிய குருகுலத்தைச் சேர்ந்த சிலர் திருச்சபைக்கு எதிராக மக்களைத் தூண்டியமை.

- மறை தொடர்பான அதிகாரம் அரசருக்கு உரியதா? மறைத் தலைவர்கள் நாட்டின் அரசர்களா? அல்லது வேறுநாட்டின் பரிசுத்த பாப்பரசரா என்ற சந்தேகத்திற்கு வழி வகுத்தார்.
- துறவிகள் துறவறத்தையும் விசுவாசத்தையும் கைவிட்டுப் பணம் சேகரிக்கவும் அரசு இலாபத்தைத் தேடுவதிலும் ஈடுபட்டனர்.
- திருத்தந்தையிடம் புனித பேதுரு, யோவான் போன்றவரிடம் இருந்த ஆழமான ஆன்மீகம் புனிதத்தன்மை இல்லாதிருந்தமை.
- சமூக, அரசியல் காரணிகளும் இவற்றுள் சில.
- இவற்றின் விளைவாக மக்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

iii. **திரிதெந்தீன் பொதுச்சங்கம் பற்றிச் சுருக்கமாக விளக்குக.**

- புரட்டஸ்தாந்து புரட்சியினால் கத்தோலிக்கத் திருச்சபைக்குப் பாரிய பாதிப்பு ஏற்பட்டது. பல மக்கள் திருச்சபையிலிருந்து விலகினர்.
- திருச்சபையில் உள்ளார்ந்த மறுசீரமைப்பு ஏற்பட வேண்டுமென்று திருச்சபைத் தலைவர்கள் கி.பி 1545
- 1563 வரையிலான காலத்தில் திரிதெந்தீன் சங்கத்தைக் கூட்டினர்.
- இச்சங்கம் திருச்சபையின் உறுதிக்குப் பதிலாக இருந்தது.
- இச்சங்கத்தின் முக்கிய நோக்கம் திருச்சபையில் உள்ளார்ந்த மறுமலர்ச்சியை ஏற்படுத்துவது திருச்சபையின் முக்கிய இரண்டு பணிகளாவன.

1. திருச்சபையின் மறையுண்மைகளை விளக்குவது.
2. திருச்சபையின் ஒழுக்கம், தார்மீகம் என்பவற்றை உயர்த்தி தீமைகளை விளக்குவர்.

**கிறிஸ்தவ மறைக்கோட்பாடுகள்**

1. திருவிவிலியம், பாரம்பரியம் ஆகிய இரண்டுமே திருமறை உண்மைகளின் ஊற்று.
2. திருவிவிலியத்தின் எல்லா நூல்களும் இறை ஏவுதலால் எழுதப்பட்டவை. திருமறை வசனங்கள் கடவுளிடமிருந்து வந்தவை.
3. போதிக்கும் அதிகாரத்தையும், கற்பிக்கும் அதிகாரத்தையும் திருச்சபைக்குக் கிறிஸ்து வழங்கினார்.
4. நற்கருணையில் இயேசுவின் பிரசன்னம் உண்மையானது. நற்கருணை ஒரு விருந்து மட்டுமல்ல. அது உண்மையான பலி.
5. தூய பேதுருவும் அவருக்குப் பின் உரிய முறையில் திருத்தந்தையானவர்களுமே திருச்சபைக்குத் தலைவராவார்.
6. இலத்தீன் மொழியில் வல்கேற் என்று அழைக்கப்படும் திருவிவிலியமே திருச்சபையின் அங்கீகாரம் பெற்றது.
7. ஏழு அருளடையாளங்களும் கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்டவை.
8. திருமணம் ஒரு அருளடையாளம், திருமண பிணைப்பு என்றுமே பிரிக்கப்படாத ஒன்று.
9. விசுவாசக் கனிகளான நற்செயல்கள் வெளிப்படுத்தும் விசுவாசத்தினால் மனிதன் நீதிமானாகின்றான்.

**குருத்துவ வாழ்வு சீர்த்திருத்தம்**

1. திருச்சபையின் கருதினால் குழுவில் அனைத்துலக உறுப்பினர்களுக்கே பதவி அளிக்க வேண்டும்.
2. ஆயர்கள் தங்கள் மறைமாவட்டங்களிலேயே தங்கி மறைப் போதனை நடாத்த வேண்டும். தங்கள் மறைமாவட்டத்திலுள்ள பங்குகளை ஒழுங்காகக தரிசிக்க வேண்டும். மறைமாவட்டப் பேரவைகள் ஒழுங்காகக் கூட்டப்பட வேண்டும்.
3. குழுக்கள் தம் பங்கு மக்களை கிறிஸ்தவ மதக்கொள்கைகளில் பயிற்றுவிக்க வேண்டும்.
4. குருத்துவப் பயிற்சிப் பள்ளிகள் ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் நிறுவப்பட வேண்டும்.
5. குருத்துவ சபைகள் புதிய அங்கத்தினரைச் சேர்க்கும் பொழுதும், புதிய தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் பொழுதும், வார்த்தைப்பாடுகளை அனுசரிப்பதிலும் கடுமையான சட்ட ஒழுங்கு முறைகளைக் கடைபிடிக்க வேண்டும்.
6. திருச்சபையின் பரிபூரண பலனை வழங்க பிரச்சாரப் போதகம் செய்யும் முறை நீக்கப்பட்டது.

**iv. புரட்டஸ்தாந்து சீர்த்திருத்திற்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட துறவற சபைகளின் மூலம் திருச்சபைக்கு ஆற்றப்பட்ட பணிகளை விளக்குக.**

- புரட்டஸ்தாந்து சீர்த்திருத்தத்தின் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட துறவறசபைகளாக இயேசு சபை, வின்சென்சியன் சபை, கார்மேல் சபை, கப்புச்சின் சபை ஆகியனவாகும்.

**இயேசு சபை**

- இளைஞர்களுக்கு விசுவாசத்தை உறுதிப்படுத்தி மக்களுக்கு கல்வியை அளிப்பதை முக்கிய இலக்காகக் கொண்டு செயற்பட்டனர்.
- பலரை மீண்டும் கத்தோலிக்கத் திருச்சபைக்கு கொணர்ந்தனர்.
- பல கல்லூரிகளை அமைத்து கல்வி அறிவு ஊட்டினர்.
- கத்தோலிக்க திருச்சபையில் இருந்து விலகிச் சென்ற பிரிவினைச் சமயத்தவர்களுக்கு உண்மை நம்பிக்கையை எடுத்துரைத்து மீண்டும் கத்தோலிக்கத் திருச்சபையில் இணையச் செய்தனர்.
- கீழைத்தேய நாடுகளில் திருச்சபை பரவுவதற்கு வழிசெய்தனர்.

  உதாரணம் : சீனா – மத்தேயு ரிச்சி அடிகளார்
  யப்பான் – புனித பிரான்ஸிஸ் சவேரியார்
  இந்தியா – புனித பிரான்ஸிஸ் சவேரியார், றொபட் டி நொபிலி அடிகளார்
- கத்தோலிக்கத் திருச்சபையின் மறைத்தூதுப் பணியில் புதிய மாற்றத்தைக் கொணர்ந்து கனடா, அமெரிக்கா போன்ற இடங்களிலும் திருச்சபை பரப்பினர்.

**வின்சென்சியன் சபை**

- மறைபோதகப் குழுக்களின் சபையை ஸ்தாபித்து மறைமாவட்டங்களில் பணியாற்றினர்.
- மேய்ப்பு பணியில் ஈடுபட்ட இவர்கள் ஏனைய குருக்களுக்கு முன் மாதிரியாக விளங்கினர்.
- ஏழைகளின் மத்தியிலும், பின்தங்கிய மட்டத்தில் இருந்த கிராமங்களிலும் இருந்து நற்செய்தியை அறிவித்து வந்தனர்.
- மறைக் கோட்பாடுகளுக்கு விளக்கமளித்து வந்தனர்.
- இரக்கப்பணிகளை முன்னெடுத்து செயற்படுத்தினர்.

**கார்மேல் சபை**

- துறவற சட்டங்களை நுணுக்கமாகக் கடைப்பிடித்து துறவறத்தின் மேன்மையை காத்துக் கொண்டனர்.
- பல நூல்களை எழுதி திருச்சபையின் புதுப்பித்தலுக்கு வழிவகுத்தனர்.
  உதாரணம் : புனித அவிலா திரேசா, புனித சிலுவை யோவான்
- ஆழ் நிலைத்தியான முறையை வாழ்ந்து மற்றவர்களுக்கு முன் மாதிரியாக இருந்தனர்.

**கப்புச்சின் சபை**

- தொடக்ககால நற்செய்தி அறிவுரை வாழ்க்கை முறையை வாழ்ந்து ஏழ்மை, எளிமை, தூய்மை நிலை-யை கைக்கொண்டு எடுத்துக்காட்டாக விளங்கினர்.
- துறவிகளின் தனிச்செபம், குழுச்செபங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்தனர்.
- நோயாளரைப் பராமரித்தல், கடின உழைப்பால் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு வாழ்ந்தனர்.
- சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் மறையுரை ஆற்றினர்.
- மறைத்தூதுப் பயணங்களை மேற்கொண்டு ஏழைகளுக்கு உதவி செய்தனர்.

07. **இலங்கையில் கத்தோலிக்க மறையைப் பரப்புவதற்கு போர்த்துக்கேய மிசனரிமார் மேற்கொண்ட நடவடிக்கைகள், அவர்கள் எதிர்கொண்ட சவால்கள், ஒல்லாந்த சீர்த்திருத்த சபையை பிரபல்யம் அடையச் செய்ய பிலிப் பல்தேயுஸ் பாதிரியார் பின்பற்றிய நடைமுறைகள், ஆங்கிலக் கல்வி அறிமுகம் செய்யப்பட்டமையால் இலங்கைச் சமூகம் பெற்றுக்கொண்ட நன்மைகள் பற்றிய மாணவர்களின் அறிவைப் பரீட்சித்தல்.**

i. **இலங்கையில் கத்தோலிக்க மறையைப் பரப்புவதற்குப் போர்த்துக்கேய மிசனறிமார் மேற்கொண்ட நடவடிக்கைகளை விளக்குக.**

- இலங்கைக்கு வருகை தந்த மிசனறிமார்கள் அனைவரும் தமது பணியை தியாகத்துடனும், அர்ப்பணத்துடனும் ஆன்மீக வாஞ்சையுடனும் வெளிப்படுத்தினர்.
- சுதேச மக்களின் பண்பாடு மற்றும் கலாசார சூழ்நிலைக்கு ஏற்ப தம்மை இயைபுபடுத்தி பணியாற்றினர்.
- போர்த்துக்கேய அரசின் உதவியுடன் பெற்ற பொருள் உதவிகளைக் கொண்டு சுதேச மக்களின் நலன்களுக்காக பயன்படுத்தினர்.
- பல்வேறுபட்ட பாடசாலைகளை அமைத்து கல்விசார்ந்த செயற்பாடுகளில் மறையறிவை ஊட்டினர்.
- "மிஷரிகோடியா" (Miseracordia) என்னும் சமூக நிறுவனத்தின் மூலமாக மனித நேயச் செயற்பாடுகளில் ஈடுபட்டு மக்களை கவர்ந்தனர்.
- ஆலயங்கள் அமைத்து ஆடம்பரமான முறையில் திருவிழாக்கள், மற்றும் திருச்சுரூப பவனி போன்றவற்றை மேற்கொண்டனர்.
- மறை அறிவை வினா விடைகள் மூலமாகவும், ஏனைய கலைகள் மூலமாகவும் வழங்கினர்.
- அரசகுடும்பத்தினரையும், சமூகத்தில் முக்கியம் பெறும் தலைவர்களையும் குழுக்களாக மனமாற்றுவதில் கவனம் செலுத்தினர்.
- பல்வேறு சபைகளைச் சேர்ந்த மறைப்பரப்பாளர்களினது வருகையும் அவர்களது பணிகளும் மறை போதகத்துக்கு உதவியாக அமைந்தன.
- மிசனறிமாரின் ஏழ்மையான வாழ்வு மக்களுக்கு எடுத்துக்காட்டாய் அமைந்தது.

**ii. போர்த்துக்கேயர் ஆட்சியின் போது மிசனறிமார் எதிர்கொண்ட சவால்களை விளக்குக.**

- புதிய பண்பாடு, கலாசாரம் மற்றும் புதிய காலநிலைகளை எதிர்நோக்கி அவற்றிற்கு தம்மை இயைபு படுத்திக்கொள்ளுதல் சவாலாக அமைந்தது.
- கோட்டை அரசன் 7 ஆம் புவனேகபாகு தனது அரசியல் இலாபத்திற்காக மிசனறிமாரின் வருகையை விரும்பியபோதும் சுதேச மக்கள் கிறிஸ்தவத்தை தழுவுவதை விரும்பவில்லை.
- கண்டி இராட்சியத்திலும் அரசியல் இலாபத்திற்காக மதமாறிய அரசன் எதிர்பார்த்த உதவி கிட்டாமையால் குருக்களையும், கத்தோலிக்கரையும் துன்புறுத்தினான்.
- யாழ்ப்பாண அரசிற்கு உட்பட்ட மன்னார் பகுதியில் 700 ற்கு மேற்பட்ட கத்தோலிக்க மக்களும், அருட்பணி லிசானோ அடிகளாரும் சங்கியன் செகராச சேகரனால் படுகொலை செய்யபட்டமையால் மிசனறிமார் அச்சத்துகுள்ளாக்கினார்.
- கோட்டை அரசில் தர்மபாலனின் தந்தை வீரிய பண்டார கத்தோலிக்க ஆலயங்களை இடித்து அழித்து மக்களை துன்புறுத்தினான்.
- அருட்பணி பிரகா, யாவோ, கால்வோ அடிகளார் கொல்லப்பட்டும் கத்தோலிக்க மதம் சார்ந்தவர்கள் துன்புறுத்தப்பட்டனர்.
- பணியாற்றுவதற்கு வருகை தந்திருந்த துறவற சபைகள் தமது பணித்தளங்கள் தொடர்பாகவும் கல்வி சார்ந்த பணிகளிலும் பிரச்சினைகளை எதிர்நோக்கினர்.
- மக்கள் ஆதரவு பெரிதாக கிட்டவில்லை.
- சுதேசிகள் மத்தியில் காணப்பட்ட சமூகச் சீர்கேடுகளும் சவால்களாக அமைந்தன.

  உதாரணம்:

  பெண்ணடிமைத்தனம், பலதாரப்பழக்கம், மூட நம்பிக்கை, பெண் கல்விக்கு முக்கியத்துவம் வழங்காமை, சாதியம் போன்றவை தொடர்பாகவும் பல சவால்களை எதிர்கொண்டனர்.
- இலங்கையின் காலநிலையும், நோய்களும் மற்றும் அடிப்படை வசதிகள் அற்ற நிலையும்.

**iii. ஒல்லாந்த சீர்திருத்த திருச்சபையைப் பிரபல்யமடையச் செய்வதற்காக பிலிப் பல்தேயுஸ் பாதிரியார் பின்பற்றிய நடைமுறைகளை விளக்குக.**

- ஒல்லாந்தரின் ஆட்சியின் போது இராணுவத்தினருக்கு மறைப்பணியாற்ற வருகை தந்த கல்வினிஸ்ற் மறைப்போதகரான வண பிலிப் பல்தேயுஸ் பாதிரியார் தமது மறைப்பணியை யாழ்ப்பாணத்தில் முன்னெடுத்தார்.
- கட்டாயக் கல்வி முறையை அறிமுகம் செய்து கல்வியின் மூலம் கல்வினிஸ்ற் மதக் கொள்கையைக் கற்பித்தார்.
- சுதேச பெற்றோர்களையும், வளர்ந்தோரையும் ஞாயிறு தின ஆராதனைக்கு சமூகமளிக்குமாறு கட்டாயப்படுத்தி மறைப் போதனைகளைப் போதித்தார்.
- சுதேச மொழியைக் கற்று அம்மொழியில் “எம் மதத்தின் முக்கிய கட்டளைகள்” என்ற கல்வின் மதக் மறைக்கல்வி நூலை அச்சிட்டு வெளியிட்டார்.
- கோயில் பற்று பாடசாலைகளில் கல்வினின் மதக் கோட்பாடுகள் மறைக்கல்வியாக கற்பிக்கப்பட்டன.
- சிறந்த மாணவர்களை ஊக்குவித்து பாராட்டி பரிசில்கள் வழங்கினார்.
- ஒவ்வொரு ஆலய வழிபாடுகளிலும் ஆற்ற வேண்டிய மறை உரைகளை அச்சிட்டு விநியோகித்து அதனை வாசிக்கச் செய்தார்.
- மறையாசிரியர்களைப் பயிற்றுவிக்க செமினரி பாடசாலைகளைத் தோற்றுவித்து மறைக்கல்வி கற்பிக்க ஊக்கப்படுத்தினார்.

**iv. ஆங்கிலக்கல்வி அறிமுகம் செய்யப்பட்டமையினால் இலங்கைச் சமூகம் பெற்றுக்கொண்ட நன்மைகளை விளக்குக.**

- ஆங்கிலேயரின் வருகையினால் ஆங்கிலக்கல்வி அறிமுகம் செய்யப்பட்டது.
- ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் பல துறைகளிலும் பாரிய பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டதால் அதனை நிர்வகிப்பதற்கு நிருவாகத்திறன் மிக்கவர்கள் இங்கிலாந்திலிருந்து வரவழைக்கப்பட்டு நிர்வாகம் செய்யப்பட்டது.
- சிறந்த புலமைமிக்க மிசனறிக்குழுக்களின் வருகையினால் பல கல்வி நிலையங்கள் உருவாக்கப்பட்டு பலரும் ஆங்கிலக் கல்வியின் உயர் நிலை பெற்றனர்.
- புலமைப்பரிசில்கள் பெற்று இங்கிலாந்து பல்கலைக்கழகங்களில் பல துறைகளில் பட்டங்கள் பெற்று சிறந்த நிர்வாகிகளாக தாய் நாட்டின் பணிகளை மேற்கொண்டனர்.
- ஆங்கில அறிவுடையவர்களுக்கு இலகுவில் அரச வேலை வாய்ப்புக்கள் கிடைக்கப் பெற்றன.
- பரந்த உலகத்தோடு தொடர்பு கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது.
- சிறந்த ஆங்கில இலக்கியங்களைப் படிப்பதற்கும் அவற்றின் விழுமியங்களை வாழ்வதற்கும் வாய்ப்புக் கிடைத்தது.
- பாரிய தொழில்நுட்ப வளர்ச்சியை அறிந்து பயன்பெறக்கூடியதாக இருந்தது.
- அன்று ஆரம்பிக்கப்பட்ட ஆங்கிலக் கல்வி இன்று இலங்கை மக்களின் பல சமூக, பொருளாதார அரசியல் தேவைகளை நிறைவு செய்வதற்கு மிகவும் பயனுள்ளதாக அமைகின்றது.
- இலங்கை மக்களின் கல்வித் தரம் உயர்ந்தது.

**08. இயேசுவின் சீடர்கள் ஒற்றுமையாக இருப்பதன் அவசியம் பற்றிய இயேசுவின் போதனைகள், கிறிஸ்தவ ஒன்றிப்பின் வரலாறு, கிறிஸ்தவ ஒன்றிப்பினை ஏற்படுத்த கத்தோலிக்கத் திருச்சபை வழங்கும் பங்களிப்பு, இலங்கையில் கிறிஸ்தவ ஒன்றிப்பை மேம்படுத்த மாணவர்களால் வழங்கக்கூடிய பங்களிப்பு என்பவைப் பற்றிய மாணவர்களின் அறிவை மதிப்பீடு செய்தல்.**

**i. சீடர்கள் மத்தியில் ஒற்றுமை குறித்த இயேசுவின் போதனை பற்றிச் சுருக்கமாக விவரிக்குக.**

- கிறிஸ்துவின் வாழ்விலும் போதனையிலும் அவர் விரும்பியது ஒற்றுமையே ஆகும்.
- குறிப்பாக யோவான் நற்செய்தி 17 ஆம் அதிகாரத்தின் உள்ளடக்கப்படும் விடயங்கள் யாவும் சீடர்கள் மத்தியில் நிலவவேண்டிய ஒற்றுமை பற்றியே பேசப்படுகின்றது.
- “தந்தையே நாம் ஒன்றாய் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருக்கும் படி நீர் எனக்கு அறிவித்த உம் பெயரின் ஆற்றலால் அவர்களைக் காத்தருளும்” (யோவான் 17 : 11) என்ற வேண்டிதலில் சீடர்கள் மத்தியில் எப்போதும் ஒற்றுமையே நிலவ வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.
- மேலும் “எல்லோரும் ஒன்றாக இருப்பார்களாக, தந்தையே நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக” ( யோவான் 17 : 21 ) என்று குறிப்பிடுவதன் மூலம் ஒற்றுமையானது இறை உறவுடன் கூடியதான ஒன்றாக அமைய வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது.
- “நாம் ஒன்றாய் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருக்குமாறு நீர் எனக்கு அருளிய மாட்சியை நான் அவர்களுக்கு அளித்தேன்” (யோவான் 17 : 22) என்பதின் மூலம் ஒற்றுமை என்பது இறைவனின் சிறப்பான கொடை என்பது வலியுறுத்தப்படுகின்றது.

- இயேசு சீடர்கள் மத்தியில் ஒற்றுமை குறித்து போதிக்கும் போது முழுத்திருச்பைக்குமாக வேண்டுதல் செய்வதாகவும் அமைகின்றது. “அவர்களுக்காக மட்டும் நான் வேண்டவில்லை அவர்களுடைய வார்த்தையின் வழியாக என்னிடம் நம்பிக்கை கொள்வோருக்காகவும் வேண்டுகின்றேன். அவர்கள் எல்லோரும் ஒன்றாக இருப்பார்களாக” (யோவான் 17 : 20) என்று குறிப்பிடுவதன் மூலம் அனைத்து திருச்சபையிலும் ஒற்றுமை நிலவவேண்டியது அவசியம் என்ற கருத்து வலியுறுத்தப்படுகின்றது.
- எனவே ஒற்றுமையின் அவசியம் தற்போதைய சூழ்நிலையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைய வேண்டியதாகும் என்றும் அதற்கு இறையருற் கொடையும், கொடையின் மூலம் ஒற்றுமைக்காக ஒவ்வொருவரும் இறைவேண்டுதல் செய்வதுடன் அதற்கான வழியையும் கைக்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தப்படுகின்றது.

**ii. கிறிஸ்தவ ஒன்றிப்பின் வரலாறு பற்றி விளக்குக.**

- திருச்சபை யூத கிறிஸ்தவம் புறவினக் கிறிஸ்தவம் என்ற பிளவுகள்
- புதிய ஏற்பாட்டுக் காலத்தில் திருச்சபையில் பிளவுகள் தோன்றிமை.
- தப்பறைக் கோட்பாடுகள் மூலம் ஏற்பட்ட பிளவுகள்
- 11 ஆம் நூற்றாண்டில் கிழக்கு, மேற்குப் பிளவுகள்
- 16 ஆம் நூற்றாண்டில் சமய சீர்த்திருத்தம் காரணமாக ஐரோப்பாவில் நிகழ்ந்த சீர்த்திருத்த சபைகளின் பிரிவும், இங்கிலாந்தில் அங்கிலிகன் சபையின் பிரிவும்.
- இத்தகைய பிளவுகள் மத்தியில் பிளவுகள் ஏற்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒற்றுமைக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 19 ஆம் நூற்றாண்டில் இருந்து கிறிஸ்தவ ஒன்றிப்புக்காக செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.
- 1844 இல் கிறிஸ்தவ இளைஞர் ஆண்கள் சங்கம் லண்டனில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1846 இல் 800 ஐரோப்பிய வட அமெரிக்க சீர்திருத்த சபையினர் தமது மறைத்தூதுப் பணிகள், அச்சகப்பணி, சமூக சீர்த்திருத்தம் என்பவற்றுக்காக “இவாஞ்சலிக்கல் அலையன்ஸ்” என்னும் அமைப்பை உருவாக்கல்.
- 1855 இல் கிறிஸ்தவ இளைஞர் பெண்கள் சங்கம் லண்டனில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1875 இல் சீர்திருத்த சபைகளின் உலக ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1908 இல் அங்கிலிக்கன் சபைப் பணியாளர் பவுல் வாட்சன் கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்தை ஆரம்பித்தார்.
- 1916 இல் திருத்தந்தை 15 ஆம் பெனடிற் அங்கீகரித்து கத்தோலிக்க திருச்சபையில் செயற்படுத்தியமை.
- 1919 இல் கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கம் பிறந்தது.
- 1965 இல் திருத்தந்தை 6ஆம் பவுல் கீழைத்தேய பிதாப்பிதாவைச் சந்தித்து மன்னிப்புக் கோரியதுடன் ஒற்றுமையை வலியுறுத்தியமை.
- திருத்தந்தை 23 ஆம் யோவான் கிறிஸ்தவ ஒன்றிப்பை ஏற்படுத்தும் முகமாக 2 ஆம் வத்திக்கான் பொதுச்சங்கம் கூட்டியமை.
- திருத்தத்தை 2 ஆம் யோவான் பவுல், 16 ஆம் பெனடிற், பிரான்சிஸ் ஆகியோர் இச்சங்கத் தீர்மானங்களை செயற்படுத்தியமை.

**iii. கிறிஸ்தவ ஒன்றிப்பை ஏற்படுத்துவதில் கத்தோலிக்க திருச்சபையின் பங்களிப்புக்களை எடுத்துக்காட்டுக.**

- இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் 16 ஏடுகளில் ஒரு ஏடு முழுவதும் கிறிஸ்தவ சபைகளின் ஒன்றிப்பைப் பற்றி பேசுகின்றது.
- இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பின் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கு என தனியான ஆணையம் வத்திக்கானில் அமைக்கப்பட்டது.
- 1964 இல் திருத்தந்தை 06 ஆம் சின்னப்பர் கீழைத்தேச திருச்சபையின் தலைவர் அத்தனாகோரை சந்தித்து எவ்வகையிலேனும் பிரிவினைக்கு நாங்கள் காரணமாக இருந்தால் தாழ்மையுடன் கடவுளிடம் மன்னிப்புக் கேட்கின்றோம் எனப் பகிரங்கமாக கூறினார்.
- 23 ஆம் யோவான் கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கான புதிய ஆர்வத்தையும் ஆழமான ஈடுபாட்டையும் கத்தோலிக்க திருச்சபையில் ஏற்படுத்தினார்.
- திருத்தந்தை 6 ஆம் பவுல் கிறிஸ்தவ ஒன்றிப்புக்காக பெரும் முயற்சிகளை மேற்கொண்டார்.
- கத்தோலிக்க திருச்சபையின் கிறிஸ்தவ ஒன்றிப்பின் முயற்சிகள் அனைத்திலும் முக்கியமானதாகத் திகழ்வது 2 ஆம் வத்திக்கான சங்கமாகும். அதில் கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றிய விதித்தொகுப்பு முக்கியமானதாகும்.
- 2 ஆம் வத்திக்கான் சங்கத்தில் அனைத்து சபைகளுக்கும் அழைப்பு விடப்பட்டமை.
- இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் வழிநடத்தலில் இயங்கும் கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கான ஆணைக்குழு கிறிஸ்தவ ஒன்றிப்புக்காக செயற்படுகின்றது.
- உலக கிறிஸ்தவ சம்மேளனமும் கத்தோலிக்க திருச்சபையும் நம்பிக்கைக் கோட்பாடுகள் பற்றிய உரையாடலைத் தொடர்ந்தும் முன்னெடுக்கின்றன.
- மறைபரப்பு நாடுகளில் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றமை.
- விவிலியம் பொது மொழிபெயர்ப்பு
- கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம் அனுசரிப்பு
- சமூக நலன்புரி நிலையங்கள் மூலம் இனபேதமற்ற பணிகள் முன்னெடுத்தல்.
- சமய உரையாடல்களை வளர்க்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டமை.

**iv. இலங்கையில் கிறிஸ்தவ ஒன்றிப்பை விருத்தி செய்வதில் மாணவரொருவர் வழங்கத்தக்க பங்களிப்புக்கள் பற்றி விளக்குக.**

- கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றி கலந்துரையாடுதல்
- ஒன்றிப்பு வாரத்தை நடைமுறைப்படுத்தல்.
- ஏனைய கிறிஸ்தவ சபைகளுக்கு மதிப்பளித்தலும் அச்சபைகளின் செயற்பாடுகளை மதித்தலும்.
- பல்வேறு சபை சார்ந்த இறையியலாளர்களை ஒன்றிணைத்து இறை வேண்டல், சடங்குமுறைகள், விவிலிய விளக்கங்கள் என்பவற்றில் ஒற்றுமையை உருவாக்கல்.
- பாடசாலைகளில் சமய வழிபாடுகளை பொதுமைப்படுத்தல்.
- ஏனைய சபையினரைப் பற்றி தெரிந்து கொள்ளுதல், அவர்களுடன் நல்லுறவுடன் பழகுதல், அவர்களது நம்பிக்கைகள் நடைமுறைகளைப் பற்றி அவர்கள் மனதைப் புண்படுத்தும் விமர்சனங்களைத் தவிர்த்தல், அவர்களுடன் நட்புறவை வளர்த்தல், அவர்கள் இன்பதுன்ப நிகழ்வுகளில் கலந்து கொள்ளுதல்.
- பொதுவிவிலிய மொழி பெயர்பை மாணவர்கள் பாவித்தல்.
- சமூகநலப் பணிகளில் ஒன்றித்து செயற்படல்.